Registered as a Newspaper

பக்கங்கள் 16
விலை ரூ. 50

# உதயன்

புதன் பொய்கை

சுடர் : 38
கதிர் : 221

புதன்கிழமை 05 ஜூலை 2023

ஆனி 20 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# முல்லைத்தீவு நீதிவான் நேற்று குருந்தூர்மலையில் ஆராய்வு!

## சட்டமா திணைக்கள அதிகாரிகளும் நிலைமைகளைப் பார்வையிட்டனர்

**முல்லைத்தீவு, ஜூலை 5**

**தண்ணீர்முறிப்பு, குருந்தூர்மலையில் நீதிமன்றக் கட்டளையை மீறி அமைக்கப்படும் விகாரைக் கட்டமைப்புக்களை முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் ரி.சரவணராஜா மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர்.** »14

## மன்னாரில் விபத்து ஒருவர் உயிரிழப்பு

மன்னார், ஜூலை 5

மன்னார் - நொச்சிக்குளம் பிரதான வீதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற விபத்தில், »14

குருந்தூர்மலை

## ஆதிசிவன் ஐயனாருக்கு 14ஆம் திகதி பொங்கல்

முல்லைத்தீவு, ஜூலை 5

முல்லைத்தீவு - குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பொங்கல் »14

## நயினாதீவு விகாராதிபதிக்கு பொன்விழாக் கொண்டாட்டம்

### நயினாதீவு மக்கள் ஏற்பாடாம் அரச தகவல் திணைக்களம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 5

நயினாதீவு ராஜ மகா விகாரையின் விகாராதிபதி நவதகல பதும கீர்த்தி திஸ்ஸநாயக்க தேரரின் பொன்விழா கொண்டாட்டம் நயினாதீவு மணிமேகலை »14

## வாயைத் திறந்த சரத்வீரசேகர மூக்குடைபட்டார் நீதிபதியிடம்!

முல்லைத்தீவு, ஜூன் 5

குருந்தூர்மலை விவகாரத்தில் கருத்துத் தெரிவிக்க முற்பட்ட முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் வீரசேகரவை, கருத்துத் தெரிவிக்க அனுமதிக்காமல் வெளியேற்றினார் முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா.

முல்லைத்தீவு - தண்ணீர்முறிப்பு குருந்தூர்மலையில், மேலதிகமாக மேம்படுத்தல் வேலைகள் »14



## கரும்புலிகள் நாள் இன்று!

யாழ்ப்பாணம், ஜூன் 5

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பால் உணர்வு பூர்வமாகக் கடைப்பிடிக்கப்படும், கரும்புலிகள் நாள் இன்றாகும். 1987ஆம் ஆண்டு ஜூலை 5ஆம் திகதி விடுதலைப் புலிகளின் முதலாவது தற்கொலைப் போராளியான மில்லரால் நெல்லியடி மத்திய மகா »10








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# மருந்துப் பற்றாக்குறைக்கு காரணம் பொருளாதார நெருக்கடி இல்லை!

## சுகாதார அமைச்சரைப் பதவி விலகுமாறு அரச மருத்துவ அதிகாரிகள் கூட்டமைப்பு அழுத்தம்

கொழும்பு, ஜூலை 5
நாட்டில் மருந்துத் தட்டுப்பாடு பொருளாதார நெருக்கடியால் ஏற்படவில்லை. மாறாக கையூட்டல் உள்ளிட்ட மோசடிகளால் ஏற்பட்டது என்பதை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும்- இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகளின் கூட்டமைப்பின் தலைவர் மருத்துவர் ருக்ஷன் பெல்லன குற்றஞ்சுமத்தியுள்ளார்.

'தேசிய ஔடத அதிகாரசபையின் சில மருந்தாளர்களைப் பணிநீக்கம் செய்ய முடிவு செய்யப்பட்டது.

அந்த முடிவுடன், இந்தப் பிரச்சினை தீர்ந்து விடப்போவதில்லை. மருந்துகளை விநியோகிக்கும் பல நிறுவனங்கள் தவறான வழியில் செயற்படுகின்றன. நாட்டுக்கு மருந்துகளை விநியோகிக்கும் நிறுவனங்களின் பட்டியலைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன்மூலம், குற்றவாளிகளை இலகுவாக அடையாளம் காண முடியும். நாட்டில் மருந்துத் தட்டுப்பாடு பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட ஒன்றல்ல. மாறாக கையூட்டல் உள்ளிட்ட மோசடிகளால் உருவானதென்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்' - என்றார். (ஒ-இ)

## மருத்துவர் பற்றாக்குறை; சிகிச்சைகள் பாதிப்பு

கொழும்பு, ஜூலை 5
விசேட மருத்துவர்களின் பற்றாக்குறை காரணமாகச் சிகிச்சை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் மருத்துவர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலரிடம் வினவியபோது, எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் சுமார் 30 விசேட மருத்துவ நிபுணர்கள் ஓய்வுபெறவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

தற்போது நிலவும் மருத்துவர் பற்றாக்குறைக்குத் தீர்வாகத் தற்போது ஓய்வு பெற்றுள்ள விசேட மருத்துவர்களை மீண்டும் பணிக்கு அமர்த்த முடியுமா என்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக அமைச்சின் செயலர் மேலும் தெரிவித்தார். ஒ-இ



## அஸ்தியை வைத்து செலாவணி

கொழும்பு, ஜூலை 5
இறந்தவர்களின் அஸ்தியை வைத்து இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் நகைகள் மூலம் வருடாந்தம் சுமார் பதினைந்து இலட்சம் டொலர் அந்நியச் செலாவணியை ஈட்ட முடிந்துள்ளதாக இலங்கை முதலீட்டுச்சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஆர்.கே.எஸ். அஷ்மாவாஷே ஆபரண வடிவமைப்புகள் ஏற்றுமதி முகவர் மூலம் இந்த நகைகள் செய்யப்படுகின்றன.

இந்த வகை நகைகளை அணிவதில் இலங்கையில் விருப்பம் உள்ளவர்கள் இல்லை. ஆனால் ஐரோப்பா, ஜேர்மனி, மத்திய கிழக்கு போன்ற நாடுகளில் இந்த நகைகளுக்குப் பெரும் மதிப்பு உள்ளது. இந்த நகைகளின் தரம் உயர்ந்ததால், அவற்றுக்கான கேள்வி அதிகரித்து வருவதாக, ஆர்.கே.எஸ். நிறுவனத்தின் தலைவர் குறிப்பிட்டார். (ஒ-இ)

# பாரபட்சமான கடன் சீரமைப்பு



**கொழும்பு, ஜூலை 5**
**உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு சாதாரண உழைக்கும் மக்களை மாத்திரமல்ல பணக்காரர்களையும் பாதிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டுமென அரசாங்க நிதி தொடர்பான குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.**

அரசாங்கம் அவ்வாறு செய்யாத காரணத்தினால் எதிர்க்கட்சிகள் இந்தப் பிரேரணையை எதிர்த்ததாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

'வருங்கால வைப்பு நிதி என்பது உழைக்கும் மக்கள் ஓய்வுபெற்ற பிறகு எதிர்காலத்தில் செலவழிக்க வேண்டிய நிதியாகும். இந்த நிதி என்ன ஆனது என்பதை நான் தொடர்ந்து காண்பித்தேன். உதாரணத்துக்கு, நம் மகளுக்குத் திருமணம் செய்து வைக்க 100 பேரை அழைக்க நினைத்தால், இந்த வருங்கால வைப்பு நிதியில் இருந்து திருமணத்துக்கு சிறிய அளவு பணம் செலவழிக்கலாம் என நினைத்தால், இப்போது 100 பேருக்கு பதிலாக 50 பேரையே அழைக்கலாம். அதுவே உண்மை. உள்ளூர்க் கடன் மறுசீரமைப்பு சுமையும் அதே நிதியில் வைக்கப்பட்டுள்ளது. இதை ஒட்டுமொத்தமாக அனைவரிடமும் பகிர்ந்து கொண்டால், ஏதோ ஒரு வகையில் நியாயப்படுத்தலாம். இது உழைக்கும் மக்களுக்கு மட்டுமல்ல, பணக்காரர்கள் மற்றும் வங்கி உரிமையாளர்களுக்கும் பொருந்தும். இதன் முழுச் சுமையும் வருங்கால வைப்பு நிதி மீது சுமத்தப்பட்டதால் எதிர்க்கட்சியாகிய நாங்கள் அதை கடுமையாக எதிர்த்தோம்' என்று ஹர்ஷ விளக்கமளித்துள்ளார். (ஒ-இ)

## மதுபான நிறுவனங்கள் ரூ. 6.2 பில்லியன் வரிநிலுவை!

கொழும்பு, ஜூலை 5
இலங்கையில் உள்ள 9 முன்னணி மதுபான உற்பத்தி நிறுவனங்களை 6.2 பில்லியன் ரூபா வரித்தொகை நிலுவையைச் செலுத்த வேண்டும் என்று மதுவரித் திணைக்களம் 14 நாள் கெடு விதித்துள்ளது. காலக்கெடுவுக்குள் பணம் செலுத்தத் தவறினால், அந்த நிறுவனங்களின் உரிமம் தற்காலிகமாக இரத்துச் செய்யப்படும். நிறுவனங்களிடம் சரியான நேரத்தில் வரிகளை வசூலிக்கத் தவறியதற்காக அரசியல் அதிகாரிகள் உட்படப் பல்வேறு பங்குதாரர்களின் அழுத்தத்தின் விளைவாக இந்த இறுதி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ.இ)

# கடன் மறுசீரமைப்புப் போர்வையில் அரச வங்கிகளை விற்கவே திட்டம்!

## குற்றஞ்சாட்டுகின்றது ஜே.வி.பி.

யாழ்ப்பாணம், ஜூலை 5
ஊழல் மோசடி காரணமாக கடன் படுகுழியில் நாடு தள்ளப்பட்டுள்ள நிலையில், அதைக் 'கடன் மறுசீரமைப்பு' என்ற போர்வையில் அரச வங்கிகளை தனியார் வங்கிகளாக மாற்றி சீரமைக்க அரசாங்கம் முயல்கின்றது.

-இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அவரது கட்சி அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் மொத்தக் கடன் 2010 ஆம் ஆண்டு 4 ஆயிரத்து 594 டொலர் மில்லியனாகவும் 2019 ஆம் ஆண்டு 13 ஆயிரத்து 431 டொலர் மில்லியனாகவும் 2022 ஆம் ஆண்டு 23 ஆயிரத்து 491 டொலர் மில்லியனாகவும் அதிகரித்துச் செல்கின்றது.

நாட்டில் வெளிநாட்டுக் கடன் வாங்கும் வேகம் வெகுவாக அதிகரித்துள்ள அதேவேளை, உள்நாட்டில் பெற்ற கடனைக்கூட அரசாங்கம் செலுத்த முடியாது திணறுகிறது.

தற்போதைய நாட்டின் டொலர் கையிருப்பு 1800 மில்லியனாகக் காணப்படும் நிலையில் எதிர்வரும் ஓகஸ்ட் 5.2 டொலர் மில்லியனைத் திருப்பிச் செலுத்தவேண்டும்.

வர்த்தக வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட கடனை அரசாங்கம் தள்ளுபடி செய்யுமாயின், வர்த்தக வங்கிகள் வைப்பாளர்களின் கணக்குகளில் கைவைக்கும். அதனால் வைப்பாளர்களின் பணம் இல்லாமற் போகும். கடன்களைத் தள்ளுபடி செய்தல் வங்கிகளுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தவுள்ளதோடு நாடு அதலபாதாளத்துக்குள் செல்லும் நிலை உருவாகும். முன்னைய ஆட்சிக்காலங்களில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி, சீனி மோசடி, தாமரைக் கோபுர மோசடி மற்றும் பனாமா ஆவணங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட ஊழல் மோசடிகள் மூலம் சூறையாடப்பட்ட மக்களின் பணம் மீண்டும் கொண்டுவரப்படவில்லை- என்றார். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வடக்கு மாகாணத்தில் உள்ள
# மருத்துவமனைகளில் 2,000 வெற்றிடங்கள்!

**யாழ்ப்பாணம், ஜூலை 5**

**வடக்கு மாகாணத்திலுள்ள மருத்துவமனைகளில் 2 ஆயிரம் பேருக்கான ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகிறது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.**

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் - இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கு மாகாணத்தில் உள்ள மருத்துவமனைகளில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகின்றது.

அதில் சுகாதார உதவியாளர்கள் ஆயிரம் பேருக்குப் பற்றாக்குறை நிலவுகிறது. அதே போல தாதியர்கள், மருத்துவ மாதுக்கள் எனப் பல்வேறுபட்ட நிலைகளிலும் ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகின்றது.

தற்போது புதியவர்களை உள்வாங்குவதில் தாமதம் காணப்படுகின்றமையால் எதிர்வரும் காலங்களில் சுகாதார அமைச்சின் ஊடாக இந்த நியமனங்கள் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கின்றோம் - என்றார். (ச-27)

# டெங்குத் தொற்று வடக்கில் உயர்வு!



மருத்துவர் சத்தியமூர்த்தி தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 5

வடக்கு மாகாணத்தில் கடந்த ஆறு மாதங்களில் ஆயிரத்து 843 பேர் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் யாழ். மாவட்டத்தில் மாத்திரம் ஆயிரத்து 491 பேர் இனங்காணப்பட்டுள்ளனர் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். வடக்கு மாகாண சுகாதார சேவை திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் யாழ். மாவட்டத்திலேயே அதிகளவு டெங்குத் தாக்கம் பதிவாகியுள்ளது. யாழ்ப்பாண நகரப் பகுதி, நல்லூர், கரவெட்டி ஆகிய பகுதிகளில் இந்த டெங்குத் தாக்கம் அதிகளவில் காணப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தில் கடந்த ஆறு மாதங்களில் ஆயிரத்து 843 பேர் டெங்கு நோயாளிகளாக இனங் காணப்பட்டுள்ளார்கள் தென்பகுதியில் இருந்து வந்த ஒருவர் மாத்திரம் டெங்குத் தாக்கத்தால் உயிரிழந்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் ஆயிரத்து 491 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 65 பேரும் மன்னார் மாவட்டத்தில் 77 பேரும் வவுனியா மாவட்டத்தில் 106 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 104 பேருமாக மொத்தமாக ஆயிரத்து 843 பேர் டெங்கு நோய்த் தாக்கத்துக்குள்ளாகியுள்ளார்கள்.

டெங்குத் தொற்றைத் தவிர்ப்பதற்கு பொதுமக்கள் தமது சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருந்து பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-26,27)



# உயிரைப் பறித்த 'செல்பி' மோகம்

கொழும்பு, ஜூலை 5

களனி கங்கை அத்தனகலு ஓயாவில் குளிக்கச் சென்ற இளம்பெண் ஒருவர் 'செல்பி' எடுக்க முயன்றபோது தவறி வீழ்ந்து நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார் என நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடந்துள்ளது. புறக்கோட்டையைச் சேர்ந்த 20 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-22)

# விரைவில் வருகிறது தேங்காய் ஐஸ்கிறீம்

கொழும்பு, ஜூலை 5

தேங்காய் ஐஸ்கிறீம் உற்பத்தி செய்வது தொடர்பாகத் தென்னை ஆராய்ச்சி நிறுவனம் அவதானம் செலுத்தியுள்ளது. தென்னை ஆராய்ச்சி நிறுவனம் ஆய்வு மேற்கொண்டு தேங்காய் ஐஸ்கிறீம் தயாரிப்பு தொழில்நுட்பத்தைக் கண்டறிந்துள்ளது. தென்னைச் செய்கையில் கிடைக்கும் பொருள்களைப் பயன்படுத்தி தேங்காய் ஐஸ்கிறீம் தயாரிக்கப்படவுள்ளது.

பசுவின் பால் அல்லது பிற பால் பொருள்களைப் பயன்படுத்தாமல் நூறு சதவீதம் தேங்காய் அடிப்படையிலான ஆரோக்கியமான தயாரிப்பாக இது அமையும் என்றும் தென்னை ஆராய்ச்சி நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)

# தங்கம் கடத்திய அலி சப்ரியின் சுங்க அறிக்கை சபாநாயகரிடம்

நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தொடர்பில் இலங்கை சுங்கத் திணைக்களம் தன்னிடம் முழுமையான அறிக்கையை வழங்கியுள்ளது என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

டுபாயிலிருந்து 8 கோடி ரூபா பெறுமதியான தங்கம் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளை சட்டவிரோதமான முறையில் கொண்டு வந்தமை தொடர்பில் குற்றவாளியாகக் காணப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தொடர்பில் சுங்கத் திணைக்களத்திடம் சபாநாயகர் விடுத்த கோரிக்கையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது என்றும், கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று அலி சப்ரியிடம் சபாநாயகர் கோரிக்கை விடுத்துள்ள போதும், அவர் இதுவரை அது தொடர்பில் எந்தப் பதிலும் வழங்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதினம் தெரியுமோ

**கி**ட்டடியில ஒரு சம்பவம். இஞ்சையிருந்து சிங்கள ஏரியாவுக்கு பொலிஸ் வேலை கிடைச்சுப் போன பெடிப்பிள்ளை ஒருத்தர், அங்க ஒரு சிங்களப் பிள்ளையை லவ் பண்ணி, கலியாணமும் கட்டி இஞ்ச கூட்டியந்திட்டார். பிறகு ஆள் பொலிஸ் வேலையை விட்டிட்டு கூலி வேலைக்குத்தான் போய் வாறவர். சிங்களப் பிள்ளைக்கு தமிழ் சரியாத் தெரியாததால அயலட்டையும் பெரிசாப் பழக்கமில்லை.இப்பிடிப் பட்ட நிலையில, அந்தச் சிங்களப்பிள்ளைக்கு குழந்தை பிறந்து நாலைஞ்சு நாள் இருக்கும். இரவு கோயில்ல ஏதோ புரோக்கிராம் எண்டு, பச்சைவயித்துக்காரியை தனிய விட்டிட்டு வெளிக்கிட்டிருக்கிறார் புருசன். இப்பிடிப்பட்ட நிலையில தன்னைத் தனிய விட்டிட்டுப் போக வேண்டாமெண்டு அந்தப் பிள்ளை கெஞ்ச, புருசனுக்கு கோபம் வந்து, மிருகமா மாறி, நடுரோட்டில இழுத்துக்கொண்டந்து, பச்சை வயித்துக்காரி எண்டும் பாக்காமல் ரத்தப்போக்கு வாற அளவுக்கு அடிச்சிட்டு, அப்பிடியே விட்டிட்டுப் போட்டான். பிறகு அயலட்டைதான் அந்தப் பிள்ளையை ஆஸ்பத்திரியில சேர்த்துக் காப்பாத்தினவை. இதெல்லாம் நியூஸில வாசிச்சு இருப்பியள்.

மனுசிக்கு அடிச்சதுக்காக புருசனை பொலிஸ் பிடிச்சு, கோர்ட்ஸூக்கு கொண்டந்தது. அந்தச் சிங்களப்பிள்ளைக்கு ஒருத்தரையும் தெரியாது எண்டதால, தன்ர சார்பில ஒரு சட்டத்தரணியைக் கூடப் பிடிக்காமல் கோட்ஸூக்கு வந்திருக்கு. அந்தப் பரிதாபத்தைப் பார்த்திட்டு நெஞ்சில ஈரமுள்ள ஓராள், அங்கையுள்ள ஒரு லோயரிட்டப் போய் நடந்ததைச் சொல்லி, சிங்களப் பிள்ளைக்காக வாதாட ஏலுமோ? எண்டு கேட்டிருக்கிறார். அதுக்கு அந்த லோயரும் 'இப்பிடி ஆருமில்லாம நிக்கிற பிள்ளைக்கு நான் பீஸ் வாங்காமலே வாதாடுறன்' எண்டு சம்மதிச்சிருக்கிறார். இப்பிடி இவை ரண்டு பேரும் கதைச்சுக் கொண்டிருந்ததை, பக்கத்தில இன்னொரு லோயர் கேட்டுக் கொண்டிருந்திட்டு இவையிட்ட வந்திருக்கிறார். 'அந்தப் பெடியன்ர லோயர் நான்தான். அந்தப் பெடியன்ர தகப்பன் இப்பிடி பச்சைவயித்துக்காரியை போட்டு மிருகம் மாதிரி அவன் அடிச்சதெண்டு எனக்குச் சொல்லேலை. அது தெரிஞ்சால் நான் வாதாட வந்திருக்கவே மாட்டன். நானும் ஒரு பெண். நானே இப்பிடி பிழையான விசயத்துக்கு துணை போறதோ?" எண்டு சொன்னதோட நிக்காமல், அடிச்ச பெடியன்ர தகப்பனிட்டப் போய், வாங்கின காசையும் குடுத்து 'இந்தக் கேஸில நான் வாதாடமுடியாது' எண்டு உறுதியாச் சொல்லிப்போட்டா. பிறகு பெடியனை மறியலுக்க போட்டாச்சு. அதுக்குப் பிறகும் அந்த லோயர்மார் இந்தச் சிங்களப்பிள்ளைக்கு பால்மா, பழங்கள் எண்டு சத்தான சாப்பாட்டுச் சாமான்கள் தங்கட காசில வாங்கிக் குடுத்திட்டுத்தான் வீட்டை போயிருக்கினம். காசு காசெண்டு அலையிற லோயர்மாருக்குள்ள இப்பிடி மனிதாபிமானமும், இரக்க உணர்வும் கொண்டவையும் இருக்கத்தான் செய்யினம். அந்த நல்லகுணம் கொண்ட லோயர்ஸூக்கு பட்சியின்ர 'சல்யூட்'!



- பட்சி

# “தலைகளை வெளியே எடுங்கள்” ‘மாஸ்’ காட்டும் மஸ்க்



**லண்டன், ஜூலை 5**
**பிரபலமான சமூக வலைத்தளமான ருவிற்றர் பாவனையாளர்களுக்குச் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இந்த அறிவிப்பை ருவிற்றர் நிறுவனத்தின் புதிய உரிமையாளர் எலான் மஸ்க் அறிவித்துள்ளார்.**

ருவிற்றர் பயனாளி ஒருவர் நாளொன்றுக்குப் பார்வையிடும் பதிவுகளின் எண்ணிக்கை தற்காலிகமாக வரையறை செய்யப்படுகின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது பயனாளர் ஒருவர் ஒரு நாளைக்கு ஆயிரம் பதிவுகளை மட்டுமே பார்க்கமுடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தரவுகளை அணுகுவது உச்ச அளவுக்குச் செல்வதைத் தவிர்ப்பதற்காகவே இந்த வரையறை என்று நிறுவன உரிமையாளர் எலான் மஸ்க் தனது ருவிற்றர் பதிவு ஒன்றில் விளக்கம் அளித்திருக்கிறார்.

சதா முழு நேரமும் டிஜிட்டல் திரைகளோடு இருக்காமல் வெளியே சென்று குடும்பத்தவர்களைச் சந்திப்பதை இது ஊக்குவிக்கும் என்று மற்றொரு பதிவில் பல் தேசிய வர்த்தகப் பில்லியனராகிய அவர் குறிப்பிட்டுள்ளார்.

“ஸ்மார்ட் போன் மீதான ஆழ்ந்த மயக்கத்தில் இருந்து எழுந்திருங்கள், உங்கள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரைப் பார்ப்பதற்காக அதிலிருந்து விலகி இருங்கள். பார்வை வரம்பை நான் நிர்ணயித்ததற்குக் காரணம், நாம் அனைவரும் ருவிற்றருக்கு அடிமையாகிவிட்டதால் அதிலிருந்து வெளியேறவேண்டும். நான் இங்கே உலகுக்கு ஒரு நல்ல செயலைச் செய்கிறேன்” என்றும் அவர் பதிவிட்டுள்ளார். இது பலரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளது.

மறுபுறத்தில் செயற்கை நுண்ணறிவு செயலிகளை உருவாக்குவதற்காகப் பயனாளர் தரவுகளை அணுகுவதில் சமூக ஊடகப் பெரு நிறுவனங்கள் மத்தியில் கடும் போட்டி எழுந்துள்ளது. பயனாளர்களது பழக்கவழக்கங்களைச் சேகரித்து செயற்கை நுண்ணறிவு மாதிரிகளை உருவாக்குவதற்காக மூன்றாவது தரப்பினர் ருவிற்றர் பயனாளர்களது தரவுகளைப் பெருமெடுப்பில் அணுகுவதைத் தடுப்பதையே இந்த நடவடிக்கை உள்நோக்கமாகக் கொண்டது என்று சொல்லப்படுகிறது. (எ-இ)

# குறையும் வன்முறைகள் மாயமான அப்பிள்கள்!

பாரிஸ், ஜூலை 5
பிரான்ஸில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரால் 17 வயதுச் சிறுவன் ஒருவன் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து ஆரம்பமான வன்முறைகள் தற்போது சற்றுத் தணிந்துள்ளன.

இந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் இதுவரை 3 ஆயிரத்து 500க்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அந்த நாட்டுத் தகவல்கள் கூறுகின்றன.

அதேவேளை, வன்முறையாளர்கள் கடைகளை உடைத்து கைபேசிகள், இலத்திரனியல் உபகரணங்களைத் திருடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்றும் கூறப்படுகின்றது. அதிகமான அப்பிள் கைபேசிகள் விற்பனை நிலையங்கள் உடைக்கப்பட்டு, அங்கிருந்த கைபேசிகள் திருடப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அதனால் அந்த விற்பனை நிலையங்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

வன்முறையாளர்களைக் கட்டுப்படுத்த 45 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

# ‘ட்ரோன்’ அச்சத்தால் மூடப்பட்ட மொஸ்கோ விமான நிலையம்

மொஸ்கோ, ஜூலை 5
மொஸ்கோ விமான நிலையத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட ஆளில்லா விமான தாக்குதலைத் தொடர்ந்து மொஸ்கோ விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

உக்ரைன்- மொஸ்கோ விமான நிலையத்தின் மீது ஆளில்லா விமானத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது எனத் தெரிவித்துள்ள ரஷ்ய அதிகாரிகள் இதன் காரணமாக நாட்டின் மிகப் பெரிய விமான நிலையத்தைத் தற்காலிகமாக மூடவேண்டிய நிலையேற்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலில் ஐந்து ஆளில்லா விமானங்கள் பயன்படுத்தப்பட்டன என்றும், தாக்குதலில் ஈடுபட்ட அனைத்து ஆளில்லா விமானங்களும் சுட்டு வீழ்த்தப்பட்டன என்றும் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலால் உயிரிழப்புகள், பாதிப்புகள் எதுவும் ஏற்படவில்லை எனவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, உக்ரைன் இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்கவில்லை. (எ-இ)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் ஊற்றெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். ஆதரவு கிடைப்பது மகிழ்ச்சி தரும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**இடபம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு குறையும். குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சில சங்கடங்கள் ஏற்படும்.

**மிதுனம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். முடிவுகள் மற்றும் புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். காரியங்கள் இழுபறியானாலும் முடித்து விடுவீர்கள். தொல்லைகள் மறையும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். பிள்ளைகள் வகையில் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் அதனால் பாதிப்பு எதுவுமிருக்காது. சகோதரர்களால் வீண் செலவுகள் ஏற்படும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. பணிகள் அதிகரிக்கும். எதிர்பார்த்த பணஉதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**கன்னி:** பணவரவு திருப்தி தரும். பிள்ளைகளின் உடல்நலனில் கவனம் தேவை. வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். மனதில் அடிக்கடி குழப்பங்கள் ஏற்படும்.

**துலாம்:** மனதில் குழப்பங்கள் நீங்கி உற்சாகம் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடிவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். செலவு செய்ய நேரிடும். மற்றவர்களுடன் வீண் விவாதத்தில் ஈடுபட வேண்டாம்.

**தனுசு:** உற்சாகம் அதிகரிக்கும். விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். கருத்து வேறுபாடு நீங்கும்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவு இருந்தாலும் திடீர் செலவுகளும் ஏற்பட்டு திணற வைக்கும். காரியங்கள் முடிவதில் இருந்து வந்த இழுபறி நிலை மாறி, அனுகூலமாக முடியும். வெளியூர்ப் பயணம் தவிர்க்கவும்.

**கும்பம்:** உற்சாகமான நாள். காரியங்கள் அனுகூலமாகும். உங்கள் பொறுப்புகளை பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மீனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு சகோதரர்களால் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும்.

# அழகாக மாறவும் ஆப்கானில் தடை!

காபூல், ஜூன் 5
ஆப்கானின் ஆட்சியைக் கைப்பற்றிய தலிபான்கள் அங்குள்ள பெண்களுக்குப் பல்வேறு தடைகளை விதித்து வருகின்றனர். தற்போது பெண்கள் அழகு நிலையங்களுக்கு அவர்கள் தடைவிதித்துள்ளனர்.

பெண்கள் கல்லூரிகளுக்குச் செல்லத் தடை, பூங்கா, சினிமா மற்றும் பொழுதுபோக்கு நிலையங்களில் பெண்கள் வேலை செய்யத் தடை, பொதுஇடங்களுக்கு ஆண்களின் துணையின்றிச் செல்லத் தடை என்று பெண்களுக்குத் தடை விதிப்பதையே தலையாய கடமையாகக் கொண்டுள்ளது தலிபான் அரசு. தற்போது பெண்கள் அழகு நிலையங்கள் செயற்படுவதற்குத் தலிபான் அரசாங்கம் தடைவிதித்துள்ளது.

அங்குள்ள அழகு நிலையங்களின் உரிமங்கள் இரத்துச் செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தலிபான் அரசின் இந்த நடவடிக்கை பலத்த விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது. உள்நாட்டில் எதிர்ப்புக்களும் கிளம்பியுள்ளன. (எ-இ)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## சுயபரிசோதனைக்கான தருணம் இது

நாடாளுமன்றத்தில் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் தொடர்பான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மிக முக்கியமான விடயமொன்றைக் குறிப்பிட்டிருந்தார். 'தமது தலைவர்கள், தம்மை வழிநடத்துபவர்கள், தமது ஆட்சியாளர்கள் நேர்மையானவர்கள் என்று மக்கள் நம்பினால், தாங்கள் சரியென நம்புகின்ற விடயத்துக்காக எந்த வொரு அர்ப்பணிப்பையும் அவர்கள் செய்யத் தயாராகவே இருக்கிறார்கள்' என்று சுட்டிக்காட்டிய அவர் அதற்கு மிகப்பொருத்தமான வரலாற்றுப் பதிவையும் எடுத்துக்காட்டினார். 'வடக்கு, கிழக்கு மக்கள் தேச விடுதலைக்காக உரிமைகளுக்காக தமது உயிரையும் அர்ப்பணிக்கத் தயாராக இருந்தார்கள். தெற்கில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டதென நம்புகிறபோது தென்னிலங்கை இளைஞர்கள் சில தடவைகள் புரட்சியில் ஈடுபட்டு உயிரை அர்ப்பணித்திருந்தார்கள்' என்று குறிப்பிட்டிருந்தார். உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக் காரணமாக ஏற்படும் சுமைகளைச் சுமப்பதற்கு மக்கள் தயாராகவேண்டும் என்றால் ஆட்சியில் இருப்பவர்கள் நேர்மையானவர்கள் என்று மக்கள் முதலில் நம்பவேண்டும் என்பதையும், ஆனால் ஆட்சியில் இருப்பவர்கள் பிணைமுறி மோசடியாளர்களும், நாட்டைக் கொள்ளையடித்து கெடுத்துக்குட்டிச்சுவராக்கியவர்களும் என்பதால் மக்கள் கடன்மறுசீரமைப்பை ஏற்கமாட்டார்கள் என்றும் அவர் கூறி யிருந்தார்.

2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் வரையில் தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழ் மக்கள் மானசீகமாக நம்பினார்கள். அவர்களால் விடிவு கிடைக்கும் என்று நம்பியிருந்தார்கள். அவர்களுக்காக எதையும் செய்யத் தயாராக இருந்தார்கள். கஜேந்திரகுமார் குறிப்பிடுவதைப்போன்று விடுதலைப் புலிகள் இனத்தின் விடிவுக்காக மாத்திரமே போராடினார்கள். தங்களை வளர்த்துக்கொள்வதற்கு – சுயலாபத்துக்குச் செயற்படவில்லை என்பதை தமிழ் மக்கள் உள்ளார்த்தமாக உணர்ந்தமையாலேயே புலிகள் காட்டிய பாதையில் ஏகமனதோடு, துன்பங்களையும் தாங்கிக் கொண்டு பயணித்தார்கள். தம்முயிரையும் ஆகுதியாக்கினார்கள். புலிகளின் தலைமை நேர்மைத் திறத்தோடும், உரிமைக்கான இலட்சியத்தோடும் அர்ப்பணிப்போடும் இருந்தமையால்தான் நூற்றுக்கணக்கான தமிழ் இளையோர்கள் தம்உயிரையே ஆயுதமாக்கி கரும்புலிகளாக வெடித்துச் சிதறியிருந்தனர். இன்று ஜூலை–5 கரும்புலிகள் தினத்தில் அந்த உன்னத ஆன்மாக்களின் தியாகத்தை தமிழர்கள் நினைவு கூருவதற்கும் அவர்கள் கொண்ட கொள்கை மீதான குன்றிடாத வீரமும் தியாகமும்தான் காரணம் ஆனால் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலச்சூழலில் இனத்துக்காக அர்ப்பணிப்புடன் உழைக்கும் தலைமையாக எவரையும் தமிழ் மக்கள் இனங்காணவில்லை. அல்லது தமிழ்ப் பரப்பில் அவ்வாறான எவரும் இல்லை. தமிழ் மக்களின் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்வோரைக்கூட தமிழ் மக்கள் நம்பவில்லை என்பதையே அவர்கள் பின்னால் அணிதிரள்வதற்கு தயாரற்ற அல்லது அவர்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படாதமையைக் குறிப்பிட முடியும். தமிழ்த் தேசியத்தில் விட்டுக்கொடுப்பற்ற – எந்தச் சமரசமும் செய்யாத தனி அணியாக தம்மை முன்னிறுத்தி இன்று வரையில் செயற்படும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அதன் தலைமையும் கூட இதற்கு விதிவிலக்கல்ல. 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான சூழலில் தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கும் அரசியல் தரப்புகளிலிருந்து தம்மைத் தனித்துவமாக அடையாளப் படுத்தி வருகின்றது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி. அதற்கு ஏற்றால்போல் எந்தவொரு விட்டுக்கொடுப்புமின்றி தமிழ்த் தேசியத்துக்கான பாதையில் பயணிக்கவும் செய்கின்றது. தேர்தல் அரசியல் என்பதைத்தாண்டி செயற்பாட்டரசியலிலும் ஏனைய தமிழ்த் தரப்புகளைவிட முன்னணி களத்தில் இறங்கிப் பணியாற்றுவதையும் மறுக்கமுடியாது. அப்படிப்பட்ட கட்சிக்காக, அதன் செயற்பாடுகளுக்காக, போராட்டங்களுக்காக தமிழ் மக்கள் தங்களை அர்ப்பணிக்கத் தயாரில்லை என்பதும் உண்மையே. அவர்கள் பின்னால் அணிதிரள்வதற்குக்கூட தமிழ் மக்கள் தயாராகவில்லை என்பதையே அந்தக் கட்சியின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் போராட்டங்களில் சொற்பளவில் கலந்துகொள்வோரின் எண்ணிக்கை காட்டி நிற்கின்றது. பெரும்பாலும் அந்தக் கட்சியின் உறுப்பினர்களைத் தவிர விரல் விட்டு எண்ணக்கூடிய பொதுமக்களே முன்னணி ஏற்பாடு செய்கின்ற போராட்டங்களில் கலந்து கொள்கின்றனர். அர்ப்பணிப்பையும், தியாகத்தையும் பற்றி வகுப்பெடுக்கும் கஜேந்திர குமாரின் கட்சிக்குப் பின்னால் அர்ப்பணிப்போடு மக்கள் ஏன் செல்லவில்லை? அப்படியானால் முன்னணி நேர்மையாக, அர்ப்பணிப்போடு செயலாற்றவில்லை என்று அர்த்தமா?

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அதன் தலைமையும் தங்களை சுயபரிசோதனை செய்துகொள்ளவேண்டிய தருணம் இது. தமிழ்த் தேசியத்தில் விட்டுக்கொடுப்பின்றிய தமது பாதையில் தமிழ் மக்கள் பின்தொடராமைக்கான காரணம் என்ன என்பதைக் கண்டறியவேண்டும். தமிழ் மக்கள் தமக்கான அர்ப்பணிப்பான தலைமையாக தங்களை ஏன் கருதவில்லை என்பதைத் தேடிப் பார்க்கவேண்டும்.

வெறுமனே எல்லோரையும் குற்றம் சுமத்துவதாலும் துரோகிகளாக்குவதாலும் மாத்திரம் நீங்கள் புனிதர்களாகமாட்டீர் கள் என்பதைத்தான் மக்கள் சொல்லி நிற்கின்றார்கள் என்பதைப் புரிந்துகொண்டால் சரி!

### நாளொரு நல்வார்த்தை

"ஒரு முட்டாள் தன்னை முட்டாள் என்று உணரும் தருணத்தில் புத்திசாலியாகின்றான். ஆனால் ஒரு புத்திசாலி தன்னை புத்திசாலி என்று பெருமிதம் கொள்ளும் தருணத்தில் முட்டாளாகின்றான்"

— அப்துல் கலாம்






# சர்வதேசப் பொறிமுறைக்கு இலங்கையில் இடமில்லை

### ஐ.நா. ஆணையருக்கு வெளிவிவகார அமைச்சர் பதில்

**கொழும்பு, ஜூலை 5**

**இலங்கையின் பொறுப்புக் கூறல் உள்ளகப் பொறிமுறைக்கமையவே முன்னெடுக்கப்படும். எக்காரணத்துக்காகவும் சர்வதேச பொறிமுறையின் கீழ் முன்னெடுக்கப்படமாட்டது. - இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத்தொடர் கடந்த மாதம் நடைபெற்றது. இதன்போது ஆணையாளர், இலங்கை பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு தாமதிக்கும்பட்சத்தில், சர்வதேச விசாரணைப் பொறிமுறை உள்ளிட்ட வலுவான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியேற்படும். என எச்சரித்துள்ளார். இது தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

'பொறுப்புக் கூறல் விவகாரத்தில் என்ன செய்யமுடியுமோ அதனை செய்வோம். சர்வதேச பொறிமுறைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறு செய்தால் மக்கள் மத்தியில் மேலும் பிரிவினைகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது. பொறுப்புக் கூறல் விவகாரத்தில் வெளிநபர்களுக்குப் பதிலளிக்க வேண்டிய தேவை கிடையாது. மாறாக 22 மில்லியன் இலங்கை மக்களுக்கே பொறுப்புக் கூற வேண்டியுள்ளது' - என்றார். (ஒ-இ)

## மனிதப்புதைகுழிகளை மறைக்கவா தொல்லியல்திணைக்கள ஆக்கிரமிப்பு?

### இப்படிக் கேள்வி எழுப்புகின்றனர் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள்

கொழும்பு, ஜூலை 5

கொக்குத்தொடுவாய் போன்று வட, கிழக்கு மாகாணங்களில் உள்ள எண்ணிலடங்காத மனிதப்புதைகுழிகளை மூடிமறைப்பதற்காகத்தான் அங்குள்ள பெருமளவான நிலங்களை தொல்லியல் திணைக்களம் தம்வசப்படுத்தியிருக்கின்றதா? என்று மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பகுதியில் கடந்த மாதம் 29 ஆம் திகதி நிலத்தைத் தோண்டியபோது மனித எச்சங்கள் மீட்கப்பட்டன. அங்கு அகழ்வுப்பணிகள் நாளை ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில் இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள், கொக்குத்தொடுவாய் பகுதியில் முறையான கண்காணிப்புடன்கூடிய அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்படுவதுடன் பக்கச்சார்பற்றதும் வெளிப்படைத்தன்மை வாய்ந்ததுமான விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டியதும் அவசியம் என்று வலியுறுத்தினர். (ஒ-இ)

## துப்பாக்கி சூட்டில் ஓட்டோச்சாரதி உயிரிழப்பு

அம்பாந்தோட்டைப்பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஓட்டோச்சாரதியொருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். 38 வயதுடைய 3 பிள்ளைகளின் தந்தையே துப்பாக்கிச்சூனாட்டில் சாவடைந்துள்ளார்.

ஓட்டோச்சாரதி தனது வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது, பிறிதொரு ஓட்டோவில் வந்த இருவர் குறித்த நபர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-22)

**06.07.2023**
**வியாழக்கிழமை**
**ஆனி 21**

சுபநேரம் : 07.28 - 08.58
ராகுகாலம் : 01.28 - 02.58

**சங்கடஹர சதுர்த்தி**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# அபிவிருத்தியில் வஞ்சிக்கப்படும் மன்னார் ஈச்சளவக்கை கிராமம்

## அடிப்படை வசதிகளேதுமின்றி மக்கள் அந்தரிப்பு

**மன்னார், ஜூலை 5**

**மன்னார் மாந்தை மேற்குப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஈச்சளவக்கை கிராமம் அடிப்படைவசதிகள் ஏதுமின்றி, சகல அபிவிருத்திச் செயற்பாடுகளிலிருந்தும் ஓரங்கட்டப்படுகிறது என அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

இதுகுறித்து ஈச்சளவக்கை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திருச்செல்வம் தெரிவித்ததாவது:-

போர்க்காலப்பகுதியில் இடம்பெயர்ந்து குடியிருப்பதற்கு காணிகளற்று நிர்க்கதி யாக நின்ற மக்களை ஒன்று சேர்த்து, குடியேற்றக் கிராமமாக இந்தக் கிராமம் நிறுவப்பட்டது. பின்னர் ஏற்பட்ட இறுதிப்போரில் அனைத்து உடைமைகளையும் இழந்து மக்கள் இடம்பெயர்ந்தனர். இறுதிப்போரின் பின்னர் மீளவும் குடியேற்றப்பட்டு மக்கள் வசிக்க ஆரம்பித்துள்ளனர். ஆயினும் ஈச்சளவக்கை கிராமமக்கள் அடிப்படை வசதிகள், அபிவிருத்திகள் ஏதுமின்றி பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

2002 ஆம் ஆண்டில் குடியேற்றம் செய்யப்பட்டபோது போடப்பட்ட கிரவல் வீதிகள் தான் தற்போதும் இந்தப் பகுதி மக்களின் பாவனையிலுள்ளது. மழைக் காலங்களில் வீதிகளில் பாடசாலை மாணவர்கள், நோயாளிகள் எனப் பலதரப்பட்டோரும் பயணிக்கமுடியாத நிலை காணப்படுகிறது.

சுத்தமான குடிதண்ணீரின்றி இந்தப் பகுதிமக்கள் சிறுநீரகநோயால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். ஈச்சளவக்கை கிராமத்தில் அமைக்கப்பட்ட குடிதண்ணீர் குழாய் மூலமாக பெரியமடு வட்டாரம், விடத்தல் தீவு வட்டாரத்தில், உள்ள பல கிராமங்க ளுக்கு நீர் வழங்கப்படுகிறது. ஆனால் எமது கிராமத்து மக்கள் குடிப்பதற்கு சுத்தமான குடிதண்ணீர் இல்லை.

நாள்தோறும் யானைகளின் அச்சுறுத்தலால் உயிர் அச்சத்திலேயே இந்தப் பகுதி மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

மக்கள் தங்களது வாழ்வாதாரத்துக்காக வளர்க்கும் தென்னை, வாழை உட்பட பயன் தரும் மரங்களையும் யானைகள் அழித்துச் செல்கின்றன.

பாடசாலைக்குரிய பௌதீக கட்டமைப்புகள் இல்லாது குறிப்பிட்ட வசதிகளுடனேயே எமது மாணவர்கள் கல்வி கற்று வருகிறார்கள். சாதாரண தரம் வரையே இங்கு கல்வி கற்கலாம். உயர்தரப் படிப்புக்காக மாணவர்கள் வேறு இடங்களுக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனால் மாணவர்களின் இடைவிலகல்களும் அதிகரித்துள்ளன.

இத்தகைய குறைபாடுகள் தொடர்பில் அரச அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு சென்றபோதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்க அவர்கள் முன்வரவில்லை.

எமது கிராமம் அபிவிருத்திப் பணிகளில் புறக்கணிக்கப்படுகிறது. எனவே உரிய அதிகாரிகள் முன்வந்து ஈச்சளவக்கை கிராமஅபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்தி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வளிக்க வேண்டும் - என்றார். (ச-213)

## வவுனியாவில் கட்டுப்படுத்தப்பட்டது படைப்புழுத்தாக்கம்!

வவுனியா, ஜூலை 5

வவுனியா மாவட்டத்தில் படைப்புழுத்தாக்கத்தின் வீரியம் தற்போது கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் அற்புதசந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் வவுனியாவில் சிறுபோக நெற்பயிர்செய்கை 5 ஆயிரத்து 976 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் முன்னெடுக் கப்படுகிறது. இதில் வவுனியா மாவட்ட ஊஞ்சல் கட்டிப் பகுதியில் 10 ஏக்கர், மகாறம்பைக்குளத்தில் 5 ஏக்கர், வீமன்கா மத்தில் 5 ஏக்கர், தாண்டிக்குளத்தில் 10 ஏக்கர், பிரமனாலங்குளத்தில் 10 ஏக்கர், பாவற்குளத்தில் 60 ஏக்கர், புளியங்குளத் தில் 5 ஏக்கர் என 105 ஏக்கர் படைப்புழுத்தாக்கத்தால் பாதிக்கப்பட்டது.

இந்தநிலையில் முறையான விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் அவை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. ஆயினும் ஊஞ்சல்கட்டி பகுதியில் 1.5 ஏக்கர் செய்கை முழுமையாக படைப்புழுவால் அழிவடைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ச-125)

## வவுனியாவிலிருந்தே அதிகளவு மறுபரிசீலனைகள்

வவுனியா, ஜூலை 5

அரசாங்கத்தின் புதிய நலன்புரித் திட்டமான 'அஸ்வெசும' திட்டத்துக்கு நாடளாவிய ரீதியில் வவுனியா மாவட்டத்திலிருந்தே அதிகளவான மறுபரிசீலனை விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று ஜனாதிபதி அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'அஸ்வெசும' நலன்புரி நன்மைகள் திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது. இதில் தாம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து நாடளாவிய ரீதியில் பொதுமக்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். இதையடுத்து ஜூலை மாதம் 10ஆம் திகதி முதல் மறுபரிசீலனைக்கு விண்ணப்பிக்கமுடியும் என்று அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் வவுனியா மாவட்டத்திலிருந்தே அதிகளவானவர்கள் விண்ணப்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-18)



## மறவன்புலவு சச்சியை சந்தித்தார் மைத்திரி

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்குப் பயணம் மேற்கொண்டிருந்த மைத்திரிபால சிறிசேன, சிவசேனை அமைப்பின் தலைவரான மறவன் புலவு சச்சிதானந்தத்தை அவருடைய வீட்டில் வைத்துச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பிலும், இதர விடயங்கள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-66)



யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தில் நலன்புரிக் கொடுப்பனவுத் திட்டத்தில் பாதிக்கப்பட்ட பயனாளிகளின் மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைப்பதற்கான பதிவுகள் கடந்த வெள்ளிக்கிழமை நான்காவது நாளாகவும் நடைபெற்றன. (ச-66)


# முதல்வர் கிண்ணப்போட்டி நடத்தச் சாத்தியமில்லை

## அறவிட்ட கட்டணம் மீளளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5

எதிர்வரும் 11 ஆம் 12 ஆம் திகதிகளில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்த முதல்வர் கிண்ணச் சதுரங்கப் போட்டி இடம்பெறுவதற்கு சாத்தியமின்மையால், போட்டியாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட நுழைவுக்கட்டணத்தை மீளளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என யாழ்.மாநகரசபை அறிவித்துள்ளது. அறவீடு செய்யப்பட்ட நுழைவுக் கட்டணமான 500 ரூபா மீள வழங்கப்படுகின்றது. அதனைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்குள் மாநகரசபையின் சிறாப்பர் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org



# வீர வரலாற்றுக்கு உயிர்ப்பூட்டும் போராளிகள் மதிப்புக்குரியவர்கள்

## அருட்தந்தை மா.சக்திவேல் ஆணித்தரம்

**யாழ்ப்பாணம், ஜூலை 5**

**தமிழர் தாயகத்தின் விடுதலைக்காக விதையாகி - வீரம் நிறைந்த வரலாற்றை வாழவைத்து - உண்மையான அரசியல் நோக்கத்துக்காகத் தம்மை அர்ப்பணித்த முன்னாள் போராளிகள், அரசியல் கைதிகள் அனைவரும் கௌரவத்துக்குரியவர்களே என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: முன்னாள் போராளிகள், அரசியல் கைதிகள் சமூக கௌரவத்துக்கு உரியவர்களே. தமிழர் தாயகத்தின் விடுதலைக்காக விதையானோர் வரலாற்றுக்குரியவர்கள் மட்டுமல்ல அவர்களே எதிர்கால வரலாற்றை உயிராகவும் உயிர்ப்பாகவும் வைத்திருப்பவர்கள் என்பதற்கு மாற்றுக் கருத்து இல்லை. போராட்டச்சூழலில் போராட்ட இயக்கத்தோடு ஒட்டிக்கொண்டிருந்தவர்கள் ஆயுதம் மௌனிக்கப்பட்ட பின்னர் தனது உண்மையான அரசியல் முகத்தை வெளிக்காட்டி அவர்களை 'ஜனநாயகத் துரோகிகள்' என வெளிப்படையாக சித்திரித்துவருகின்றனர். முன்னாள் போராளிகள் எனத் தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட சிலர் தமது குறுகிய அரசியல் மற்றும் சுகபோகத்துக்காக பேரினவாதத்தின் கைக்கூலிகளாகச் செயற்படுகின்றனர். அரசியல் கைதிகளுக்கும் பணம் அன்பளிப்புச் செய்யும் அமைப்பு நெறி தவறி அரசியல் கைதிகளைப் பயன்படுத்துவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. இதுவும் தமிழர்களின் அரசியலை அழிக்கும் செயலாகும். இவ்வாறு எமக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்படும் அவதூறுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் -என்றார். (ச-இ)

# ஏழிசை மாலை இசை நிகழ்வு

சாவகச்சேரி, ஜூலை 5

தென்மராட்சிக் கல்வி வலய இசை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து நடத்தும் ஏழிசை மாலை இசை நிகழ்வுகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அதிபர் திருமதி சியாமளா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக சங்கீத வித்துவான் பொன். ஸ்ரீவாமதேவன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் காண்டீபன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

நிகழ்வில் கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை இசை ஆசிரியைகளான திருமதி ஜெயநிஷா மற்றும் தனுஜா ஆகியோரின் இசைக் கச்சேரியும், மாணவர்கள், இசை ஆசிரியர்களின் குழுப்பாடல் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ச-ரி2.9)

# சுண்டிக்குளம் பூங்காவில் சட்டவிரோத மணலகழ்வு

## வனஉயிரிகள் திணைக்கள அதிகாரிகள் நேரடியாக ஆய்வு

கிளிநொச்சி, ஜூலை 5

கண்டாவளை சுண்டிக்குளம் தேசிய பறவைகள் பூங்காவில் சட்டவிரோதமாக இடம்பெறும் மணலகழ்வு தொடர்பில் அண்மையில் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இந்தப் பகுதியில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு இடம்பெறுகின்றது என மக்களால் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கமைய வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் சட்டங்களுக்குப் பொறுப்பான உதவிப்பணிப்பாளர் டி.எம். வீரசிங்க தலைமையிலான குழுவினர் குறித்த பகுதிக்குச் சென்று மணல் அகழ்வு தொடர்பில் கண்காணித்தனர். (ச-113)



# பெரியபுலோ வைரவர் அலங்காரத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 5

சுழிபுரம், பெரியபுலோ ஞானவைரவர் ஆலய அலங்காரத் திருவிழா இன்று புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

ஆடிப்பிறப்பு தினத்தன்று பொங்கல் உற்சவத்துடன் திருவிழா நிறைவுபெறும்.

எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 1008 சங்கு முழுக்கு கிரியைகள் சிவஸ்ரீ ஞானசம்பந்தர குருக்கள் தலைமையில் நடைபெறும் என ஆலய நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-ரி2,9)

# கும்பாபிஷேகம்

பளை, ஜூலை 5

பளை இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலய கும்பாபிஷேகத்தின் 1008 சங்குமுழுக்கு இன்று புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளது. (ரி2-9)

# அதிபர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி, ஜூலை 5

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் பணியாற்றிய அதிபர்கள் ஓய்வுபெறவுள்ள நிலையில் அந்த அதிபர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலை வகை II ஐச் சேர்ந்த எழுதுமட்டுவாழ் அ. த. க. பாடசாலை, மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயம், பாடசாலை வகை III ஐச் சேர்ந்த கரம்பகம் அ. த. க. பாடசாலை, குடமியன் அ.த.க. பாடசாலை, சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயம், கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவத்தை வலய நிர்வாகப் பிரிவில் பெற்று எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச-ரி3,9)

# கனரக வாகனம் - கார் மோதி கோர விபத்து!

## தாய், மகள் சாவு

கொழும்பு, ஜூலை 5

க்னரக வாகனமும் காரும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் தாயும் மகளும் உயிரிழந்துள்ளனர். தந்தை படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என காலி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் காலி, கரந்தெனிய பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

விபத்தில் 38 வயதுடைய தாயும், 13 வயதுடைய மகளும் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர். காரைச் செலுத்திய தந்தை படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விடுமுறை நாள்களில் சுற்றுலா சென்றுவிட்டு வீடு திரும்புகையில் விபத்தில் சிக்கி அவர்கள் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கனரக வாகனச் சாரதியை கைது செய்த பொலிஸார், விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-ரி2, 22)

# யாழ்.கடற்றொழிலாளருடன் கலந்துரையாடிய மைத்திரி!

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ்ப்பாணத்துக்கு 3 நாள்கள் பயணம் செய்திருந்த முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன, கடந்த சனிக்கிழமை பருத்தித்துறை முனைப் பகுதியில் யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர் சங்கத்தினரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கலந்துரையாடலில் கடற்றொழிலாளர்கள் சார்பில் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன முன்னாள் தலைவர் அ.அன்னராசா, வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச முன்னாள் தலைவருமான நா.வர்ணகுலசிங்கம் ஆகியோர் பங்கேற்றனர்.

சட்டவிரோத மீன்பிடி முறைகள், எல்லை தாண்டிய மீன்பிடி, உள்ளூர் மற்றும் வெளியூர் ட்ரோலர் படகுகளின் அத்துமீறல்கள், சுருக்குவலை சட்டவிரோதச் செயற்பாடுகள், மீனவளங்களை அடியோடு சூறையாடுதல், மீன்களின் இனப்பெருக்கக் காலங்களை கவனிக்காத அத்துமீறிய மீன்பிடிகள் உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து மைத்திரிபால சிறிசேனவுக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

அதன்போது மைத்திரிபால சிறிசேன, வடக்கு மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து கவனம்செலுத்தி அவர்களது வாழ்வாதாரத்தைக் காக்க வேண்டியவர்களே கண்டுகொள்ளாதுள்ளபோதும், நாம் நாடாளுமன்றில் காத்திரமான எதிர்ப்பை வெளிப்படுத்துவோம்.

எல்லைதாண்டிய மீன்பிடி தொடர்பாக இந்திய அரச தரப்பைச் சந்தித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அழுத்தத்தை வழங்கும் - என்றார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் சஜின் டி வாஸ் குணவர்த்தன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் பேராசிரியர் சமில லியனகே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் உடனிருந்தனர். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைத்தொடர்புக் கோபுரத்துக்கு எதிராக ஏழாலையில் போராட்டம்!

## இரவிரவாக முன்னெடுப்பு

ஏழாலையில் ஜே/203 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில், தொலைத் தொடர்புக் கோபுரமொன்றை அமைப்பதற்கு எதிராக மக்கள் நேற்று இரவிரவாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்கள் நெருக்கமாக வாழும் இந்தப் பகுதி தொலைத்தொடர்புக் கோபுரம் அமைக்கப்படுவதற்கு உகந்ததல்ல என்று வலியுறுத்தி கடந்த முதலாம் திகதி அந்தப் பகுதி மக்கள் இணைந்து ஆர்ப்பாட்டமொன்றையும் முன்னெடுத்தனர்.

எனினும் தொலைத் தொடர்புக் கோபுரம் அமைக்கப்படும் இடத்துக்கு நேற்று ஹன்ரர் வாகனத்தில் பொருள்கள் எடுத்துவரப்பட்டன. இதையடுத்து மக்கள் ஒன்றுகூடி வாகனத்தை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார், இவ்வாறு வாகனத்தை மறிக்க முடியாது என்றும் வாகனத்தை விடுவிக்காவிட்டால் கைது செய்வோம் என்றும் மக்களிடம் தெரிவித்துள்ளனர். எனினும், பொலிஸாரின் மிரட்டலுக்கு செவிமெடுக்காத மக்கள், நாம் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்தே போராடுகின்றோம். கைது செய்வதாயின் எங்கள் அனைவரையும் கைது செய்யுங்கள் எனத் தெரிவித்தனர். இதையடுத்து மக்களின் போராட்டம் இரவிரவாகத் தொடர்ந்தது.

பின்னர், எதிர்வரும் இரண்டு நாள்களுக்குள் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதென போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஒன்றுகூடி முடிவெடுத்ததையடுத்து இரவு 10 மணியளவில் போராட்டம் கைவிடப்பட்டது. (ம-66)


### தவறிவிட்டது

யாழ். வைத்தியசாலைக்கு முன்பாக சோமசுந்தரம் சற்குணராஜா என்பவரின் தேசிய அடையாள அட்டை (631822347V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 928 5267**

CS/51124) AH-1

### பதவி வெற்றிடம்

**தெல்லிப்பழை, துர்க்காபுரம் மகளிர் இல்லத்துக்குப்** பின்வரும் பணியாளர்கள் உடன்தேவை. தகுதியானவர்கள் **இன்று தொடக்கம் 10.07.2023** காலப்பகுதிக்குள் உங்கள் சுயவிபரக் கோவையை அனுப்பிவைக்கவும்.

✓ விடுதிச்சாலை மேற்பார்வையாளர் (பெண்)

✓ விடுதிச்சாலை உதவி மேற்பார்வையாளர் (பெண்)

**கல்வித் தகைமையும் பிற தகைமைகளும் கருத்திற் கொள்ளப்படும்.**

தலைவர்,
துர்க்காபுரம் மகளிர் இல்லம்
தெல்லிப்பழை.

மேலதிக தொடர்புகளுக்கு
**021 321 3151**


## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 04 . 1950



மறைவு 30 . 06 . 2023

### கந்தையா இரத்தினசிங்கம் (குருக்கள்)

பலாலியை பிறப்பிடமாகவும் வட்டுக்கிழக்கு வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கந்தையா இரத்தினசிங்கம் அவர்கள் கடந்த (30.06.2023) வெள்ளிக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னையா வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கம்மா அவர்களின் அன்புக் கணவரும், சுகந்தினி, சுபாஜினி, சுதாகர் (லண்டன்), பிரதீபன், சுஜீந்தினி, தர்சினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், மதியாபரணம், மகிந்தன், கிரிராஜ் (கனடா), துவாரகன் (லண்டன்), நிமல்ராஜ் (பிரான்ஸ்), விமல்ராஜ் (பிரான்ஸ்), வினோராஜ் (பிரான்ஸ்), நர்மதா, நிதர்சன், சுபஸ்தலா, சுயசீலன், சுசீதரன், சுதர்சன், சுயந்தன், சத்தியதேவி, சிவானந்தராசா, தவராசா (ஜேர்மன்) ஆகியோரின் மாமனாரும், மல்லிகாதேவி, பிரிந்தாபரன், காலஞ்சென்ற பிரபாகரன் ஆகியோரின் சிறிய தந்தையாரும், பூபாலசிங்கம், காலஞ்சென்ற அன்னபூமணி மற்றும் நவரட்ணம், ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வராசா, தவராசா ஆகியோரின் மைத்துனரும், தீபனா, ஜெயசுதன், கம்ஷனா, கிருஷிகா, லக்ஷனா, மதுப்பிரசாந், அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.07.2023) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அடைக்கலம் தோட்ட வீதி,
வட்டுக்கிழக்கு (மாவடி), வட்டுக்கோட்டை.

**தகவல்: குடும்பத்தினர்.**
**076 6886 417**
**077 065 8722**

(CR 40289) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 07 . 1944



மறைவு 03 . 07 . 2023

### சின்னையா வல்லிபுரநாதன்

**(ஓய்வுபெற்ற ஆசிரியர் – யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி)**

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, சங்கத்தானை இத்தியடிப்பிள்ளையார் கோவில் வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா வல்லிபுரநாதன் கடந்த (03.07.2023) திங்கட் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா (பிரசித்த நொத்தாரிஸ்) - பவளம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் - செல்வரத்தினம் (தும்பளை) தம்பதிகளின் மூத்த மருமகனும், ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும், கெங்காதரன் (சுவிஸ்), கீதா ஆகியோரின் அன்புத் தந்தையும், யசோதை (சுவிஸ்), காலஞ்சென்ற ஜெயக்குமார் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஹீராகவி, கோகுல், ஜெயகிருஸ்ணா, தினேஷ்காந், வினு ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான இராமநாதன், யோகராஜா மற்றும் விசுவநாதன், சந்திரலேகா, கிருஸ்ணநாதன், பாக்கியலட்சுமி, சண்முகநாதன், காலஞ்சென்ற சோதிநாதன் மற்றும் சுமங்கலராணி, பாலநாதன், கருணைநாதன், குகநாதன் ஆகியோரின் சகோதரரும், ஜெயசீலன், பத்மாசினி, சிவகுமாரன், சாந்தமலர், செல்வராஜன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (07.07.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/25435)AH-1

**தகவல்: குடும்பத்தினர்**

**கெங்காதரன் - 0041 787 370 259, கீதா - 077 793 8221**

## கேள்வி அறிவித்தல்

## PSDG நிதி - 2023

## துணுக்காய் பிரதேசசபை, துணுக்காய்.

01. இலங்கை சனநாயக சோசலிச குடியரசினது மாகாண சபை நிதியின் ஒரு பகுதி கீழ் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்டங்களிற்கு பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. தலைவர், பெறுகைக்குழு துணுக்காய் பிரதேசசபை, முல்லைத்தீவு, அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 4/2016(1) இலக்க 16.03.2016ம் திகதிய நிதிச்சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தை சார்ந்தவர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரியதரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
04. கேள்வி பெறத்தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி (வீதி) பொருத்தமானதரத்தில் ICTAD/CIDA பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக் குழு, துணுக்காய் பிரதேச சபை, துணுக்காய் (தொலைபேசி இல:-021 228 4532/ 021 228 4926 E-mail:psthunukkai@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு துணுக்காய் பிரதேச சபை, துணுக்காய் எனும் இடத்திலிருந்து 05.07.2023 ம் திகதியிலிருந்து 18.07.2023 ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் மாலை 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர் பெறுகைக்குழு துணுக்காய் பிரதேச சபை, துணுக்காய் எனும் முகவரிக்கு 19.07.2023 ம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் / கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்விகளானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து 77 (எழுபத்து ஏழு) நாட்கள் (04.10.2023) வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்.) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/44(05)/02 /PSDG -02/2023 | Improvement of Alankulam 3rd Road | 6.52Mn (வரிநீங்கலாக) | 98 நாட்கள் | C8/C7 and C6 (வீதி) | 100,000.00 | 01.11.2023 |

11. கேள்விகோரல் பற்றியமுன் கூட்டிய கூட்டம் 14.07.2023 ஆம் திகதி 14.30 மணிக்கு துணுக்காய் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தசெலவில் கலந்துகொள்ளமுடியும்.
12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக் குழுத் தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**துணுக்காய் பிரதேச சபை,**
**முல்லைத்தீவு,**
**வடமாகாணம்.**

(CR/40297)AH-1

**05.07.2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை





"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்." - வள்ளுவர்

# தற்கொலைக்குத் தீர்வு கல்வியின் ஊடான தன்னம்பிக்கையே!



■ பழனித்துரை தர்மகுமாரன்
ஆசிரியர்
உடுவில் மகளிர் கல்லூரி

தன்னம்பிக்கை அற்ற வாழ்க்கை தற்கொலையை நாடுகிறது. மனிதப் பிறப்புக்கு ஒப்பான படைப்பு எதுவுமில்லை. மிகவும் மகோன்னதமான படைப்பாக உள்ள மனித உயிர் தன்னைத்தானே மாய்த்துக் கொள்ள முயல்கின்றது என்றால் ஏதோவொரு குறைபாடு எமது கல்வி முறையில் உள்ளது என்றும் அதற்கு அர்த்தம் கொள்ளலாம்.

கல்வி என்பது அறிவை மட்டும் ஊட்டுவது அல்ல. நாகரீகம், தன்னம்பிக்கை, சவால்களை எதிர்கொள்ளல், சமூகமயமாதல், தலைமைத்துவம், வழிகாட்டல், வழிப்படுத்தல், துணை நிற்றல், சிந்தனையைத் தூண்டுதல், ஒழுக்கம், நன்நெறியை பின்பற்றுதல், ஆளுமையை வளர்த்தல், ஆற்றல்களை வெளிப்படுத்தல் போன்ற பல்வேறு செயல்பாடுகளின் வெளிப்பாடே கல்வி.

அதாவது 'சமநிலை ஆளுமை கொண்ட சிறந்த பிரஜையை உருவாக்குதல்' கல்வியின் இறுதி இலக்கு என கல்வியாளர்கள் கூறுகின்றனர். ஆனால் இன்றைய கல்வியில் மகுடவாக்கியமாக இந்த இலக்கு இடம்பெற்றிருந்தாலும், நடைமுறையில் மாணவர்களுக்கு போட்டிப் பரீட்சைக்கான கல்வி முறையே திணிக்கப்படுகின்றது.

### வினா - விடைக்கல்வி வாழ்க்கைக்கு உதவாது

ஏட்டுச்சுரக்காய் கறிக்கு உதவாது என்பதுபோல, வினா விடை கல்வியே இன்று காணப்படுகின்றது. இதன்மூலம் தமது இலக்கை அடைந்து விட்டோம் என பெற்றோர்களும், பாடசாலை நிர்வாகமும், கல்வித்திணைக்களமும், பீற்றிக்கொண்டாலும் நாளுக்கு நாள் நடைபெறும் தற்கொலைகள் எமது கற்றல் கற்பித்தலின் வீழ்ச்சியையே எடுத்தியம்புகின்றன. கடந்த இரண்டு கிழமைகளில் தமிழர் தாயகத்தில் ஐவர் தற்கொலையால் இறந்துள்ளனர். இருபது பேர் அதற்கு முயற்சி செய்துள்ளனர். இது எமது சமூக அமைப்புக்கு விடப்படும் சவாலாகும்.

பரீட்சைப்புள்ளிகளை வைத்து மனித அறிவை அளந்துவிட முடியாது. கல்விக்கு தேர்ச்சிமட்டம், கணிப்பீடு என்பன அவசியமானதாகக் காணப்பட்டாலும் மாணவர்களின் உடல், உள ஆரோக்கியத்தை பேணுவதில் பாடசாலை நிர்வாகம் அக்கறை கொள்ள வேண்டும். 'இயற்கை எனது நண்பன்' அதிவிருந்தே எனது வாழ்வியலை பின்பற்றி வளர்ச்சி கண்டேன் என்றார் தேசியத் தலைவர். எமது மாணவர்களையும் இயற்கையுடன் வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.

அதற்காகவே கல்விக்கொள்கையில் 'வெளிக்கள கல்வி' என்னும் பாடப்பரப்பு உள்வாங்கப்பட்டு, மாணவர்களை வகுப்பறையுடன் மட்டுப்படுத்தாது சவால் மிகுந்த வாழ்க்கையை எவ்வாறு வெற்றிகொள்ளல் என்பதை வெளிக்கள கல்வியின் மூலம் கற்றுக்கொடுக்க வேண்டும். இது இன்று பாடசாலைகளில் நடைபெறுவது இல்லை. ஆளுமை என்பது கல்வியோடு தொடர்புடைய் அனைவருக்கும் பரிட்சயமான ஒரு பதம். ஆளுமை உள்ள ஒருவரிடம் தன்னம்பிக்கை மிகுதியாகவும் விகுதியாகவும் இருக்கும். இதனால் மற்றவர்களை நம்பி வாழமாட்டார்கள். எனவே பிரச்சினைகளும் முரண்பாடுகளும் ஏற்படமாட்டாது.

பறவையானது தனது சிறகை நம்பியே கிளையில் உட்காரும். கிளை முறிந்தாலும் தன் சிறகு தன்னைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கையே பறவைகளிடம் மிகுந்துள்ளது. ஆனால், இன்றைய மாணவர்கள் மற்றவர்களில் சார்ந்துவாழப் பழகிக்கொண்டுள்ளனர்.

### தக்கன பிழைக்கும்

தற்கொலை என்பது தீர்வல்ல. தக்கன பிழைத்துக் கொள்வதே வாழ்வு. காலத்துக்கும் நேரத்துக்கும் ஏற்ற வகையில் எம்மை முகாமை செய்து பழகிக்கொள்ள முனைய வேண்டும். திட்டமிடல் என்பது மிகவும் முக்கியமானது. எனவே சிறு வயதிலிருந்தே திட்டமிட்டு வாழப்பழகிக் கொள்ளவேண்டும். பிள்ளைகளுக்கு ஆசைக்கு வாழக்கற்றுக்கொடுக்காது தேவைக்கு வாழ கற்றுக்கொடுங்கள் வாழ்க்கை சிறக்கும். வாழ வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். பருவங்களை இரசித்தும் ருசித்தும் ஆற்றல்களை வெளிப்படுத்தியும் வாழ்வதற்குத் தூண்ட வேண்டும்.

சிங்கமும் புலியும் அடர்ந்த காட்டில்தான் மானும், மரையும், எருமையும் ஏனைய சிறு விலங்குகளும், பறவைகளும், பட்சிகளும் உயிர்வாழ்கின்றன. தம்மைச் சிங்கமும் புலியும் வேட்டையாடி உணவாக்கிவிடும் என்பதற்காக தமது இணங்களை பெருக்காமல் விடுவதில்லை. வாழாமல் இருப்பதில்லை. மாறாக அந்தக் கொடிய விலங்குகளிடம் இருந்து எவ்வாறு தப்பிப்பிழைக்க வேண்டும் என்பதை கற்றுக்கொள்வதுடன் தம் சந்ததிக்கும் கற்றுக்கொடுக்கின்றன. இதனால், மகிழ்ச்சியாக வாழ்கின்றன. மனித இனத்தைத் தவிர ஏனைய உயிரங்கிகள் எவையும் தற்கொலை செய்வதில்லை. இதனைக் கருத்திற்கொண்டு வாழ்க்கை என்பது இன்பம் துன்பம் சூழ்ந்ததாக மாறிமாறி வந்துகொண்டே இருக்கும். இன்பம் வரும்போது மகிழ்வதும் துன்பம் வரும்போது துவண்டுவிடுவதும் தம்மை வருத்துவதும் தேவையற்றனவே. எனவே இளம் பராயத்தினருக்குக் கல்வியுடன் சவால்களுக்கு எவ்வாறு முகம்கொடுக்க வேண்டும் என்பதை அனுபவ வாயிலாகவும் இயற்கையின் எதிர்வினையின் ஊடாகவும் சூழல் மாற்றங்களையும் சமூக மானிட மாற்றங்களையும் எதிர்கொண்டு வெற்றிகொள்ளக் கற்றுக்கொடுக்க வேண்டும். இல்லையேல் மாற்றங்களுக்கு ஏற்ப தம்மை மாற்றிக்கொள்ள முடியாதவர்களும் புரிந்துகொள்ள முடியாதவர்களும் இந்தப் பூவுலகில் தம்மால் வாழமுடியாது என நினைத்து உயிரை மாய்க்க நினைப்பது பெற்றோருக்கும் நண்பர்களுக்கும் உணவினர்களுக்கும் சமூகத்துக்கும் செய்யும் துரோகமாகும். கல்வியின் மூலம் தன்னம்பிக்கையை ஏற்படுத்தி சவால்கள் மிகுந்த வாழ்க்கையை சரித்திரமாக்க வேண்டுமே ஒழிய, இடையில் எம்மை நாமே மாய்த்துக்கொள்ளக் கூடாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்



## யாழ் ஆயரின் ஆசிச்செய்தி

கிறிஸ்துவிலும் மரியன்னையிலும் பக்தியுள்ள,
பேரருட் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்
யாழ் ஆயர்.

அறிவு என்னும் பெட்டகத்தை திறக்க உதவும் ஒரே சாவிதான் கல்வி. அந்த கல்வி என்னும் சாவியை வைத்து மாணவர்களின் அறியாமை என்னும் இருள் போக்கி வாழ்வில் விடியலை கண்டிட அயராது பாடுபட்டு கல்விப் பணியாற்றிய யா/ சில்லாலை றோ.க.த.க. பாடசாலையின் அதிபர் திருமதி. J.M.G.P. அவர்களின் மணிவிழாவுக்கு ஆசியுரை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் அதிபராக கடமையாற்றிய காலத்தில், 1990இல் யா/ இளவாலை கன்னியர் மட மகா வித்தியாலயத்தில் சங்கீத ஆசிரியராக நியமனம் பெற்று தமது கல்விப் பணியினை தொடங்கினார். பல ஆளுமைப் பண்புகளை தம்மகத்தே கொண்டு மாணவர்களை முன்னேற்றப் பாதையில் நடத்திச் சென்ற இவரை ஆசிரியராக, அதிபராக எனக்கு நன்கு தெரியும். தம்முடைய தனித்துவமான தலைமைத்துவப் பண்பினாலே யா/ பெரியவிளான் றோ.க.த.க. பாடசாலை, யா/மாதகல் சென் தோமஸ் றோ.க.த.க. பாடசாலை, இறுதியாக யா/சில்லாலை றோ.க.த.க. பாடசாலை போன்றவற்றில் சிறந்த அதிபராக பாடசாலைகளை முன்னேற்றப் பாதையில் வழிநடத்திச் சென்றது சிறப்பம்சம் ஆகும். நல்லதொரு ஆசானாக தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவச் செல்வங்களை கல்வியிலும், இறை நம்பிக்கையிலும், ஒழுக்கத்திலும், ஏனைய இணைபாடத்திட்ட செயற்பாடுகளிலும் வளர தம்மை அர்ப்பணித்து செயற்பட்ட ஒரு அதிபராக இவர் இருக்கின்றார். "சின்னஞ்சிறிய என் சகோதர சகோதரிகளுக்கு நீங்கள் செய்த எல்லாம் எனக்கே செய்தீர்கள்" என்று மத்தேயு நற்செய்தி 24:40இல் குறிப்பிடப்படுவது போல தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட சின்னஞ்சிறியவர்களாகிய மாணவர்களில் அக்கறை கொண்டு அவர்களை சமூகத்தின் சிறந்த பிரஜைகளாக உருவாக்குவதில் இவர் ஆற்றிய பணியானது கடவுளுக்கு ஆற்றிய பணியாக நான் கருதுகின்றேன். எனவே தமது மணிவிழாவில் மகிழ்ச்சியுறும் திருமதி பியன்வெனுவின் கல்விப் பணி தொடரவும், இறைவன் தாமே உடல், உள சுகம் கொடுத்து இவரையும், இவரது குடும்பத்தையும் ஆசீர்வதிக்க வேண்டி நிற்கின்றேன்.



## Words of Appreciation

Sis.M.Maria Concy
Vice Principal

We the school society of J/Sillalai R.C.T.M. School is delighted to extend our heartiest congratulations and wish you a happy and a peaceful retirement.

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/ சில்லாலை றோ.க.த.க.பாடசாலை.



Best Wishes
Congratulations

## திருமதி யூஸ்ற்றர் மரியகொறற்றி பீற்றர் பியன்வெனு அம்மையார்

### சேவை விபரம்

- 1990.03.22 – முதல் நியமனம் யா/ இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்
- 1996.05.06 – கிளி / கல்மடுநகர் அ.த.க. பாடசாலை
- 1997.02.03 – யா / இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்
- 1999.07.26 – கடமை நிறைவேற்று அதிபர் யா / பெரியவிளான் றோ.க.த.க. பாடசாலை
- 2000.08.04 – அதிபர் சேவை - SLPS - III யா / பெரியவிளான் றோ.க.த.க பாடசாலை
- 2013.03.20 – யா / மாதகல் சென். தோமஸ் றோ.க.பெண்கள் பாடசாலை
- 2014.05.12 – யா / சில்லாலை றோ.க.த.க. பாடசாலை

## ஆசிரியர்களின் வாழ்த்துப்பா

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/சில்லாலை றோ.க.த.க.பாடசாலை.

சில்லாலைத் தாயில்
சிறப்புடன் பணியாற்றி - இன்று
மணிவிழா காணும்
மாண்பு மிகு அதிபரே
வான் தொடும் தூரம்
உம் புகழ் புகழட்டும்....
நீர் பதித்து போகும் பாதையும்
சத்தியமாய் எங்களுக்கு வேண்டும்
அதுவே எங்கள் பாதையாய் மாறும்

ஓய்வின் பின்னரும் - நீவிர்
உடல் உள நலத்தோடு
இன்றும் என்றும் இளமையாய்
இனிதாய் புதிதாய் மலர்ந்திட
கதிரை மாதாவை
கைகூப்பி இறைஞ்சுகின்றோம்
வாழ்க வாழிய என்றும்
சிற்பியாய் சில்லைக்கு

## மணிவிழா நாயகி பற்றி ஆசிரியர் நலன்புரிச்சங்கத் தலைவரின் உள்ளத்திலிருந்து ...



திரு.சி.வித்தகன்
தலைவர் - ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,
யா / சில்லாலை றோ.க.த.க.பாடசாலை

திருமதி யூஸ்ற்றர் மரியகொறற்றி பீற்றர் பியன்வெனு அம்மையார் அவர்கள் அகவை அறுபதைக் கடந்து கல்விப் பணியில் மூன்று தசாப்தங்களை தாண்டி சேவையாற்றி யா / சில்லாலை றோ.க.த.க. பாடசாலையில் இருந்து ஓய்வு பெறும் இத் தருணத்தில் பாடசாலை ஆசிரியர் நலன்புரிச்சங்கம் சார்பில் வாழ்த்துரை வழங்குவதில் அகமகிழ்கின்றேன். யா/ இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக முதல நியமனம் பெற்று, ஆசிரியர் சேவையில் அம்மையார் ஆற்றிய அர்ப்பணிப்பு மிக்க சேவை அவரை ஒரு தசாப்த காலத்திற்குள் அதிபராக மாற்றியது. யா/ பெரியவிளான் றோ.க.த.க. பாடசாலையில் அதிபராக பொறுப்பேற்றுக் கொண்ட திருமதி யூஸ்ற்றர் மரியகொறற்றி பீற்றர் பியன்வெனு அம்மையார் அவர்கள் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக அதிபர் சேவையை யா/மாதகல் சென் தோமஸ் றோ.க.த.க பாடசாலை, யா/சில்லாலை றோ.க.த.க பாடசாலை ஆகியவற்றில் ஆற்றியுள்ளார். நகர்ப்புற பாடசாலைகளில் கல்வி, இணைபாடவிதானச் செயற்பாடுகளில் மாணவர் வெற்றி என்பது சாத்தியமான ஒன்றாகும். ஆனால் எமது பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு, க.பொ.த.சாதாரணதர பெறுபேறு ஆகியவற்றை உயர்த்திக் காட்டியவர் எம் அம்மையார். வழமையாக ஒரு மாணவர் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்தி வரும் எமது பாடசாலையில் 2017ம் ஆண்டு திரு.அண்ணாமலை கருணாகரன் ஆசிரியர் அவர்கள் தரம் 05இல் கற்பித்த கால கட்டத்தில் அம்மணியின் வழிகாட்டல்கள், எடுத்துக் கொண்ட முயற்சிகள் புலமைப்பரிசில் பரீட்சையில் 04 மாணவர்கள் சித்தியெய்தி எமது பாடசாலைக்கு பெருமை தேடித் தர வழிகாட்டியவர் ஆவார். அந்தவகையில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை பெறுபேற்றை அதிகரிப்பதற்காக அம்மணி எடுத்த முயற்சிகள் பல. அந்த வகையில் வெண்கரம் அமைப்பினருடன் தொடர்பை ஏற்படுத்தி பாடசாலை ஆசிரியர்களை பயன்படுத்தி மேலதிக வகுப்புக்கள், மாலைநேர வகுப்புக்கள், சுயகற்றலுக்கான இடவசதிகள் என்பவற்றை ஏற்படுத்தி 2018 ம் ஆண்டு க.பொ.த சாதாரண பரீட்சைப் பெறுபேற்றையும் உயர்த்திக் காட்டினார்.

மேலும் எமது மாணவர்கள் கூடி, குண்டு போடுதல் நிகழ்வு போன்றவற்றிலும் சித்திரப்போட்டியிலும், மாகாணமட்டத்தில் அம்மையாரின் காலத்தில் வெற்றியீட்டியுள்ளனர். அத்துடன் மறைக்கல்வி பரீட்சையிலும் மாவட்ட ரீதியில் தங்கப்பதக்கங்களைப் பெற்றுள்ளனர். இவ்வாறாக அம்மணி சகல துறைகளிலும் பாடசாலையை அலங்கரித்து சில்லைக்கு பெருமை தேடி தந்தார். சில்லாலை றோ.க.த.க. இல் மாணவர் பலரை சிறப்பாக்கினார். இன்று அவர்களிற் பலர் பல்கலைக்கழகங்களில் கற்றுக்கொண்டும் இருக்கின்றார்கள். சுருங்கக் கூறின் நான் கண்டு வியந்த ஆளுமை கொண்ட பெண் தலைவர் இவர். எம் பாடசாலையின் அதிபராக கிடைத்தது பாடசாலையின் வரமே ஆகும். அம்மணியின் ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய புனித கதிரை மாதா அருளை இறைஞ்சி நிற்கின்றோம்.



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# நெஞ்சம் நெகிழும் 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திரு. பொன்னுத்துரை பரமநாதன்

மலர்வு 31.03.1942 – உதிர்வு 23.06.2016

திதி: அபரபட்ச திருதியை (05.07.2023)

ஏழு ஆண்டுகள் நகர்ந்தாலும் நம்மைவிட்டு அகலாது உங்கள் நினைவுகள் வருகையில் நிலைகுலைந்து போகின்றோம் அப்பா உங்களை நினைக்காத நொடிகளில்லை கண் இமைக்கும் நேரத்தில் கண்களை மூடி விட்டீர் அப்பா! உங்கள் உருவம் காண கண்ணீர் நித்தமும் வடிக்கின்றோம் அப்பா உங்கள் நினைவுகள் எங்கள் இதயங்களிலிருந்து என்றும் அழியாது அப்பா என்றும் நினைவுகள் அனுதினமும் சீரடி சாயி பாபாவை வேண்டுகின்றோம்.

ஓம் சாயி ராம்

குடும்பத்தினர்.
மகன் - விஷ்ணு
விஷ்ணு நகைத் தொழிலகம்,
யாழ்ப்பாணம்.

40, யமுனாவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(CS/51131)AH-1



# 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 26 • 06 • 1941

இறப்பு 15 • 07 • 2003



## திரு. தம்பிஜயா சிவராசா

தலைமகனே!

தென்மராட்சி பெற்றெடுத்த
எங்கள் தலைமகனே!
தம்பிஜயா தங்கமுத்து வழிநடத்திய
எங்கள் ஐயா சிவராசா!

நாவற்குழி நான்கு திசையும்
உன் பெயரே கேட்குதே!
உன் நினைவு நாட்கள்
இருபது அகவையாகுதே!

தனலட்சுமியைக் கரம் பிடித்தாய்
எங்கள் உடன்பிறப்பு பாசத்தை ஊட்டி வளர்த்தாய்
சங்கிலிய மன்னனின் மனைவியின் பெயரை
யமுனா என்று பெயரைச் சூட்டி அரசி ஆக்கி அகமகிழ்ந்தாய்

மோகனா, யமுனா, உதயா, ராணி என்று உன்
பிள்ளைகள் கற்பனையை வளர்த்தே காட்டினர்
ஸ்ரீ, குகன், ஞானன், ரஞ்சன், இந்திரன் ஆகிய
மகன்களை உன் புகழ் காக்க வளர்த்தாயே!

நாவற்குழி மேற்கு, கைதடி. குடும்பத்தினர்.

(CS/51121)AH-1


## கரும்புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தியாலயத்தில் நிலைகொண்டிருந்த இராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அவரின் நினைவாகவே ஒவ்வொரு ஆண்டும் ஜுலை மாதம் 5ஆம் திகதி தமது உயிரையே துச்சமெனக் கருதி ஆகுதியாகிய கரும்புலிகள் தினம் விடுதலைப் புலிகளால் கடைப்பிடிக்கப்பட்டுவந்தது. போர்முடிந்த பின்னரும் இந்த நாளில் படையினர் தீவிர சோதனைகளையும் பாதுகாப்புக் கெடுபிடிகளையும் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழம் கண்ட குழந்தைக் கவிஞர்கள்

பத்மா இளங்கோவன்

(ஈழத்து இலக்கியப் படைப்பில், முத்திரை பதித்து நல்லபல ஆக்கங்களைத் தந்த பல்வேறு படைப்பாளிகள் தொடர்பாக உதயன் புதன்பொய்கையில் கடந்த வாரம் பிரசுரமான ஆக்கத்தின் தொடர்ச்சியே இது...)

வித்துவான் க.வேந்தனாரின் குழந்தைப் பாடல்களில் இன்றளவும் பாடப்படும் அழகான பாடல்கள் பல உள்ளன. இதற்குரிய காரணம் அவர் குழந்தைகளின் மனதில் இறங்கிக் குழந்தையாகவே மாறி, அவர்களைக் கவரும் பாங்கில் ஓசை நயம், எளிய சொற்கள், சிறிய அடிகள், இனிய சந்தம் என மொத்தத்தில் குழந்தைகள் விளங்கிக் கொள்ளும் இலகு தமிழால் பாமாலைகளைத் தொடுத்தார். வெற்றியும் கண்டார். இன்றளவும்... **'காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக் கட்டிக் கொஞ்சும் அம்மா...'** பாடல் மூலம் வாழ்ந்து கொண்டே இருக்கிறார்.

புலோலியைச் சேர்ந்த கவிஞர் யாழ்ப்பாணன் ஆசிரியராகவிருந்து அதிபராக உயர்ந்தவர். இவர் பாலர் கீதம், கண்ணன் பாட்டு, கவிதைக் கன்னி, மாலைக்கு மாலை போன்ற நூல்களின் ஆசிரியர். இவரது எழுத்தாற்றலுக்கு இவை சான்று பகர்கின்றன. பல பாட நூல்களையும் எழுதியளித்த இவரின் கவிதை நூல்கள் பலவாகும். குழந்தைகளுக்காக இவர் பாடிய பாடல்கள் மிகவும் இனிமை வாய்ந்தவை, இசையோடு பாடக்கூடிய எளிய பாடல்கள் இவருடையவை.

**'தோழா எனக்கொரு பாப்பா உண்டு தொட்டில் தானதன் வீடாகும்..'** என ஒரு குழந்தையின் செயற்பாடுகளை ஒரு பொம்மையை வைத்து குழந்தை பாடுவதாக அமைந்த பாங்கு மிக அற்புதமாகும்.

**'புத்தகம் தன்னைக் கிழிக்குமடா அது பொருள்களை வாங்கி எறியுமடா எத்தனை குற்றம் செய்தாலும் எவருக்கும் அதனில் பட்சமடா'** இவ்வாறு அருமையான கருத்துமிக்க பல பாடல்களைத் தந்த கவிஞர் பாராட்டுக்குரியவரே.

கவிஞர் எம்.ஸி.எம்.ஸுபைரின் குழந்தைப் பாடல்களும் இங்கு நினைவு கூரத்தக்கன. கண்டி மாவட்டத்திலுள்ள கல்கிசை என்னும் ஊரில் பிறந்து ஆசிரியர் பணியை மேற்கொண்ட இவர் பாலர் பாடல்களைப் பத்திரிகைகளிலும், வானொலியிலும் இடம் பெறசெய்த பெருமை பெற்றவர். 1965ஆம் ஆண்டில் இவர் வெளியிட்ட ஷமலரும் மனம்| என்ற குழந்தைப்பாடல் தொகுப்பு 75 பாடல்களைக் கொண்டதாக உள்ளது. குழந்தைகளைக் கவரும் சுவை மிகுந்த பாடல்கள் இவருடையது. குழந்தைகள் விரும்பும் சுற்றுச் சூழலில் உள்ள பறவைகள், பிராணிகளைக் காட்டிக் குழந்தைகளின் சிந்தனையைத் தூண்டும் இவரது உத்தி வரவேற்கத்தக்கது.

ஷஎன்ன சொல்லுது| என்ற பாடலொன்றில்... **'மாமரத்தில் கூவும் குயில் என்ன சொல்லுது அது மாம்பழம் போல் இனிய மொழி பேசச் சொல்லுது'** என்றவாறு குழந்தைகளுக்குத் தெரிந்த சிறிய சொற்கள், எளிய நடை, இனிய சந்தத்துடன் குழந்தைகள் கண் முன்னே நித்தம் காணும் காட்சிகளை வைத்தே அவர்களை நேரே பார்த்து சிந்திக்க வைப்பது அருமையான யுக்தியாகும். சிறுவர்களுக்காக அதிகம் உழைத்த கல்விப் பணிப்பாளர், அண்மையில் மறைந்த கவிஞர் த.துரைசிங்கம் குழந்தைகளுக்காக எழுதிய குழந்தைப் பாடல் தொகுப்புகள் அதிகம்.

மாணவர்களுக்கான பாடப் புத்தகங்கள், பயிற்சிப் புத்தகங்கள், சங்கீதம், நடனம், சமயம் பற்றிய ஆய்வு நூல்கள் எனப் பலவற்றைப் படைத்தாலும் அவரிடம் விஞ்சி நிற்பது சிறுவர் இலக்கியமே.

இவரது ஷபாடி ஆடுவோம்| என்ற பாடலில் **'மயிலைப் போல ஆடுவோம் மகிழ்ந்து நாமும் பாடுவோம் குயிலைப் போல கூவுவோம் கூடிக்கூடி ஆடுவோம்'** என்றவாறு, குழந்தைகளுக்கு எப்பொழுதும் பறவைகள், பிராணிகள் என்றால் மிகவும் பிரியம்இ அவற்றிடம் உள்ள ஈடுபாட்டில் உள்ளம் மகிழ்ந்து குதூகலிக்கும் குழந்தைகளை இங்கே காட்டுகிறார் ஆசிரியர். பிள்ளைகள் அபிநயித்து மகிழ்ந்து பாடும் பாடல்கள் இவை. குழந்தை உள்ளம் அறிந்து பாடல்கள் தருவதில் வல்லவர் என்பதை இவரது பல பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

இரசிகமணி கனக செந்திநாதன் ஷபாட்டி அழுகிறாள்| என்னும் பாடலில்... **'சிறிய பூச்சி பிடிக்கவே பெரிய பல்லி ஊர்ந்தது பெரிய பல்லி பிடிக்கவே கரிய பூனை பதுங்கிற்று'** எனச் சிற்றுயிர்கள், சிறுபிராணிகளின் உணவுச் சங்கிலித் தொடரைக் குழந்தை மொழியில் ஓசை நயத்துடன்கொண்டு செல்கிறார் ஆசிரியர். உலகியல் வாழ்வின் உண்மையை விளையாட்டாகக் குழந்தைகளுக்குப் புகுத்தும் அழகே தனிதான். மெல்ல மெல்ல வளரும் குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கு இப்படிப்பட்ட பாடல்களே அவசியம். இதில் ஆசிரியர் வெற்றி பெற்றிருக்கிறார்.

கவிஞர் மு. பொன்னம்பலத்தின் ஷமழை விழா| என்ற பாடல் மழைக்காலக் காட்சியைக் குழந்தை மொழியில் ஓசை நயத்துடன் அழகாக வர்ணிக்கும் விதமே தனிதான். மிக அற்புதமான பாடல் இது.

**'மழையைக் கண்டு தவளைத் தாத்தா மத்தளம் கொட்டிறார்** பழைய பாட்டைத் தினம் தினமும் பாடிக் காட்டுகிறார். தட்டான் பூச்சி வெளியில் வந்து சிறகடிக்குது தம்பளப் பூச்சி மண்ணில் ஊர்ந்து பட்டு விரிக்குது. சூரியனார் குளிரைக் கண்டு முகிலைப் போர்க்கிறார் சோம்பலோடு இடைக்கிடை தன் கண்ணை சிமிட்டிறார்...' மழைக் காலக்காட்சியை அருமையாகக் கண்முன்னே கொண்டு வருகிறார் ஆசிரியர். 28 சிறிய அடிகளைக் கொண்ட இப்பாடல் வளர்ந்த சிறுவர்களும் பாடி மகிழக் கூடிய அழகான பாடல் என்பதே உண்மை.


மேலும் கவிஞர் **சாரணா கையூமின் ஷஇனிய கீதம் பாடுமே|** என்ற பாடலில் சிறிய சொற்களில் எளிமையாகக் கருத்துக்களைக் குழந்தைகளிடம் புகுத்தும் விதம் அழகு. **'கரிய குயில் பாடுமே கள்ளம் இன்றிப் பாடுமே சிறிய மனிதன் புத்தியை சிந்தை நொந்து பாடுமே'** இவரது பாடல்கள் குழந்தைகளைச் சிந்திக்கத் தூண்டிக் கேள்வி எழுப்பி தெளிய வைப்பன. இத்தகைய பாடல்களும் குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்குத் தேவையானதே.

தொடரும்..

# "காணாமற் போனவர்கள்"

நூல் வெளியீடு

எழுத்தாளர் ஊடகர் சண் தவராஜாவின் 'காணாமல் போனவர்கள்' சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு மும்பையில் நடைபெற்றது. மும்பை இலக்கியக் கூடத்தின் ஏற்பாட்டில் பாண்டுப். பிரைட் மேல்நிலைப்பள்ளி, வி.தேவதாசன் கலையரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (28.05.2023) மாலை அயலக தமிழர் நலவாரிய உறுப்பினர் அலிசேக் மீரான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கவிஞர் இறை.ச.இராஜேந்திரன், கவிஞர் புதியமாதவி ஆகியோர் நூல் திறானாய்வுரைகளை நிகழ்த்தினர்.




இலெமூரியா அறக்கட்டளை நிறுவனர் சு.குமணராசன் மும்பை புறநகர் மாநில திமுக பொருளாளர் கிருஷ்ணன் அவர்களுக்கு முதல் பிரதியை வழங்கினார். இரண்டாவது பிரதியை தி.மு.க.வின் மும்பை பொறுப்பாளர் எழுத்தாளர் கரூர் இரா.பழனிச்சாமியிடமிருந்து அன்னா கிரானா உரிமையாளர் சிவகுமார் இராமச்சந்திரன் பெற்றுக் கொண்டார். மூன்றாவது பிரதியை மும்பை இலக்கியக் கூடத்தின் புரவலர் அமலா ஸ்டேன்லியிடமிருந்து மகிழ்ச்சி மகளிர் பேரவையின் வெண்ணிலா சுரேஷ்குமார் பெற்றார்.



தமிழ்த் தாய் வாழ்த்தை குழந்தை கெனிசா பழனி விக்னேசு இசைக்க வரவேற்புரையை மும்பை இலக்கியக் கூடத்தின் ஒருங்கிணைப்பாளர் கவிஞர் வ.ரா.தமிழ்நேசன் வழங்கினார். மும்பை இலக்கியக் கூட புரவலர் எழுத்தாளர் சேதுராமன் சாத்தப்பன், இந்திய பேனா நண்பர் பேரவை நிறுவனத் தலைவர் எம். கருண், மராத்திய மாநில தமிழ் எழுத்தாளர் மன்றத் தலைவர் முனைவர் வதிலை பிரதாபன், மும்பைத் தமிழ்ச் சங்க மேலாளர் செயலாளர் மிக்கேல் அந்தோணி, ஜெரிமெரி தமிழ்ச் சங்க ஆலோசகர் ஜெ.பால்துரை, ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் கலாநிதி கார்த்திகேசு திருப்பதி

நீத்தார் நயப்புரை

## சிரிப்புக்கதைகள் மூலம் மாணவர்களிடையே சிந்தனையை மேம்படுத்திய கற்பித்தலாளன்



■ வடகோவை சிவநேசராசன்

'சிரிப்பு' இது சிந்திக்கத் தெரிந்த மனித குலத்துக்கே சொந்தமான கையிருப்பு. 'வாய் விட்டு சிரித்தால் நோய் விட்டுப் போகும்' என்பது தமிழ்ப் பொன்மொழி. அமிழ்தினும் இனிய எங்கள் தமிழ்மொழியின் இலக்கிய இலக்கணங்களை மாணவர்களுக்கு திறம்படக் கற்பிப்பதற்காக சிரிப்புக் கதைகளை பிரதான சாதனமாகப் பயன்படுத்தி வெற்றிகண்டவர் ஆசிரியர் அமரர் கலாநிதி கார்த்திகேசு திருப்பதி. சிலேடை மொழி கலந்த சிரிப்புக் கதைகள்கூறி எல்லோரையும் சிரிக்க வைத்த ஆசிரியர் கலாநிதி திருப்பதி, மே மாதம் 16ஆம் திகதி செவ்வாய்க் கிழமை எல்லோரையும் அழவைத்து விட்டு தனது குல தெய்வமான வைரவப் பெருமானின் திருப்பாதங்களில் சரணடைந்துவிட்டார்.

என்றும் மகிழ்ச்சியான மலர்ந்த முகம், பரந்த அறிவுக் கேற்ற விரிந்த நெற்றி, நெற்றி முழுவதும் வீபுதிப் பூச்சு, எவரது மனங்களையும் புண்படுத்தாத பண்பான பேச்சு இவைதான் ஆசிரியர் கலாநிதி திருப்பதியின் தனித்துவமான அடையாளங்கள்.

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த அமரர்களான கார்த்திகேசு இரத்தினம் தம்பதிகளின் மகனாகிய இவர், கோப்பாய் சரவண பவானந்த வித்தியாலயம், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயம், முழங்காவில் மகா வித்தியாலயம், பளை மத்திய கல்லூரி ஆகியவற்றில் தமிழ்மொழி ஆசிரியராகப் பணிபுரிந்து தமிழ்மொழியில் ஆற்றல் மிக்க பல மாணவர் பரம்பரையை உருவாக்கியிருக்கின்றார். அத்துடன் இவரின் தமிழ்மொழி கற்பிக்கும் ஆற்றலை கௌரவிக்கும் வகையில் 2017ஆம் ஆண்டில் வடமாகாணக் கல்வி அமைச்சு 'நல்லாசிரியர்' விருது வழங்கிக் கௌரவித்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை பேராசிரியர் ம.இராகுநாதனின் வழிப்படுத்தலில் இவர் மேற்கொண்ட 'பெரியாழ்வாரும் மாணிக்கவாசகரும் கையாண்ட இலக்கிய உத்திகள் பற்றிய ஒப்பியலாய்வு' என்ற தலைப்பிலான ஆய்வுக் கட்டுரைக்காக 2019ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்துறை கலாநிதிப் பட்டத்தை வழங்கியுள்ளது. அத்துடன் இன்றைய மாணவர்களின் பயன்பாட்டிற்காக 'திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்தில் இலக்கிய உத்திகள்' என்ற ஆய்வு நூலை 2020ஆம் ஆண்டில் எழுதி வெளியிட்டுள்ளார். இயல்பாகவே இயற்றமிழில் ஆற்றல் மிக்க கலாநிதி திருப்பதி பிரதேசத்தில் உள்ள பல சைவ ஆலயங்கள் மீது திரு ஊஞ்சல் பாடல், திருப்பள்ளி எழுச்சி ஆகிய பாடல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அன்னாரின் திடீர் மறைவு தமிழ் மொழியை நேசிக்கும் உள்ளங்கள் ஒவ்வொன்றுக்கும் பேரிழப்பு ஆகும். தமிழ் மொழியின் மேன்மையை உலகெங்கும் பரப்புவதே அமரர் கலாநிதி கார்த்திகேசு திருப்பதிக்கு நாம் செய்யும் உண்மையான அஞ்சலி ஆகும். ■

# போதையின் பிடியில் இருந்து மீளுமா இளையோர் சமூகம்?

உடுவிலூர் கலா



**ஒரு நாட்டின் பெறுமதி மிக்க மூலதனம் இளையோர் சமூகமே. நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் பெரும் பொறுப்பும் இளையோர் கரங்களிலேயே ஒப்படைக்கப்பட்டுள்ளது. எமது இளையோரின் இன்றைய நிலை என்ன? மீளுமா இளையோர் சமூகம்? சாபத்திற்குள்ளானவர்களா நாம்? இவற்றையெல்லாம் மறந்துதான் நாங்கள் பயணப்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.**

கடந்து வந்த பாதையின் அவலங்கள், கண்ணீர், உயிரிழப்புக்கள், அங்க இழப்புகள், உறவுகளின் இழப்புகள் கொஞ்சநஞ்சமா? இன்றும் வலி சுமந்த மனதோடு நடைப்பிணமாக எம்பயணம் தொடர்கிறது. துயர்கள் தொடர்கின்றன. போராலும், கொரோனாவாலும் அடைந்த துன்பத்துக்கும் துயரத்துக்கும் மேலான துயரத்தைத்தான் இன்று எங்களின் சந்ததி கண்டுகொண்டிருக்கின்றது.

வாள்வெட்டு, போதை, பாலியல் வன்முறை இம் மூன்றும் இன்று இளையோருடன் கைகோத்துப் பயணிக்கிறது. எல்லாக் குற்றச்சாட்டுகளுக்கும் அலைபேசிகளையும், நட்புகளையும் காரணம் எனச் சொல்வது அபத்தமானது. இன்றைய சமூகச் சீர்கேடுகள் யாவுக்கும் பெற்றோரும் காரணம். அதுவும் முக்கியமாக தாயே காரணம். நானும் ஒரு தாயாக துணிந்து இக் கருத்தை முன்வைக்கிறேன். எம் இனத்தின் ஒவ்வொரு தாயும் 14 வருடங்கள் முன்னோக்கி சென்று பார்த்தால் அன்றைய தாய்க்குலத்தின் வேதனை, கண்ணீர் பொத்திப் பொத்திப் பாதுகாத்த தன்மை, தூக்கமின்மை என யாவும் உணர்வின் வலிகளாகத் தெரியும். நெஞ்சை நெருடும் நினைவுகள் அவை.

வெள்ளைவான் வருமா?, நாய் குரைக்குதா? குண்டுமழை பொழிகிதா? வெளியே போன பிள்ளை திரும்பி வருமா? என்றெல்லாம் ஏக்கத்தோடு கல்லையெல்லாம் கடவுள் என்று நம்பி கரம் கூப்பி கண்ணீர் வடித்தார்கள். இன்று எவ்வாறு தமது பிள்ளைகளை நடுத்தெருவில் விட்டார்கள்? தாய்மார் மட்டுமா? அக்கா, தங்கை, சித்தி, மாமி, பேத்தி என்று அனைவரும் அன்று இளையோருக்குப் பாதுகாப்புத் தேடினர், இன்று அந்த நிலை இல்லை. இருளை நோக்கி படுகுழியை நோக்கி கண்மூடிக் கொண்டு பயணம் செய்கிறார்கள். இன்றைய சீரழிவுகளை கண்டுங்காணாமலும் இருக்கும் பெற்றோரை என்னவென்று சொல்வது.

### அதிகரிக்கும் போதை

போதைப்பொருள் கடத்துகிறார்கள், விக்கிறார்கள் என்று நாளுக்கு நாள் விவாதிக்கப்படுகின்றது. யார் போதைப்பொருள்களைக் கடத்துகின்றார்கள்? யார் அவற்றை விற்கின்றார்கள்? இவற்றுக்கு யார் பலியாகின்றார்கள்? என்றெல்லாம் சிறைசென்று பார்த்தால் 90 வீதமானவர்கள் இளைஞர்களாகவே இருக்கின்றனர். இதில் வெட்கம் என்னவென்றால் பெண்களும் இந்த இழிவான செயல்களில் இன்று பங்குதாரர்களாக உள்ளனர். எதிர்காலத்தைச் செதுக்கவேண்டிய மாணவர் சமூகம் இன்று போதைக்குள் மாண்டு கிடக்கின்றது. போதையின் கொடூர விளைவால் வன்புணர்வுக்கும் பாலியல் துர்நடத்தைக்கும் உட்படும் பெண்கள் ஏராளம். பச்சியம் சிறுமிகள் வரையில் பல்லில்லால பாட்டி வரை யாவரும் 'காமம் பொருள்களாகவே' இந்தப் போதையின் முன் தெரிகின்றனர். இந்த அவலநிலை என்று மாறும்? எப்போது அமைதியானதும் சுபீட்சமானதுமான சமூகமொன்று இங்கு உருவாகும்.

போதைக்கு அடிமையானவர்கள் இருளையே விரும்புவார்கள். தனிமையோடு ஆழ்ந்த சிந்தனையில் ஒன்றித்திருப்பார்கள். யாரைப் பார்த்தாலும் தம்மைப் பற்றியே கதைப்பதாக உணர்வார்கள். சுவருக்கு அடித்த சுண்ணாம்பையே சுரண்டி உண்பார்கள். இன்னும் சொல்லப் போனால் மரணத்தையெ விரும்புவார்கள். மரணத்தைத் தேடுவதிலும் ஆவலாய் இருப்பார்கள். இப்படியான துன்பியல் நிகழ்வுகளைக்கண்டும் பேசாதிருக்கும் பெற்றோரை என்னவென்பது? பெற்றோரை எப்படி இவ்வளவு பொறுப்பற்றுப் போனார்கள் என்பது புரியாத புதிரே.

இன்று சில கிராமங்கள் போதைக்கிராமங்களாக மாறியுள்ளன. இதனால் எத்தனை பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள்? எத்தனை குடும்பங்கள் நடுத்தெருவில் நிற்கின்றன? வெளியே நின்று பார்ப்போர் காறி உமிழும் நிலை. அழகான எமது தாயகத்தில் வகை தொகை இல்லாமல் உயிர்களை காவு கொடுத்தவர்கள் நாம். எங்கள் வரலாற்றில் போதையா? நெஞ்சு பதறவில்லையா? பெற்றோரே கொஞ்சம் பொறுப்புணருங்கள். உங்கள் பிள்ளைகளைக் கண்காணியுங்கள். போதைக்கு அடிமையாவது என்பது இறப்பைத் தேடுவதற்கு ஒப்பானது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையத்தளமும் சமூகப் பாதுகாப்பும்

சி.கதீசனா,
ஊடகக் கற்கைகள்,
யாழ். பல்கலைக்கழகம்



இன்றைய மனித வாழ்க்கையானது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்துடன் பின்னிப் பிணைந்துள்ளதை காணக்கூடியதாக உள்ளது. இணையம் என்பது உலக அளவில் பல இலத்திரணியல் வலையமைப்புக்களின் கூட்டிணைப்பே. இணையத்தை மையப்படுத்திய செயற்பாடுகள் ஊடாக அனைவரும் மிகுந்த பயன்களைப் பெற முடியும். அதேநேரம், இணையத்தளத்தை அதிகளவில் பயன்படுத்துவதன் காரணமாக சைபர் தாக்குதல்கள் உள்ளிட்ட குற்றச்செயல்கள் இடம்பெறக்கூடிய சாத்தியமும் காணப்படுகின்றது. தகவல் தொடர்பாடல் உட்கட்டமைப்பு வசதிகளை பரவலாக்குவதன் மூலம், தகவல் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் முக்கியமான பணியாகவும் பொறுப்பாகவும் அமைகின்றது.

ஆனால், இன்று தகவல் கட்டமைப்பானது பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகின்றது. இது வர்த்தகத்துறை, கல்வித்துறை என்று பல்வேறு துறைகளிலும் ஆழ வேர்விட்டுள்ளது. அத்துடன், இணைய வழி மூலம் மேற்கொள்ளப்படும் இலத்திரனியல் தொடர்பாடல்கள், தேசியப் பாதுகாப்புக்கு நேரடி விளைவுகளை ஏற்படுத்தும் காரணி எனவும் கண்டறியப்பட்டுள்ளது. சைபர் தாக்குதல்கள் தற்காலங்களில் அதிகளவில் இடம்பெறுகின்ற ஒரு சாதாரண சம்பவமாக மாறி உள்ளதுடன், அரசியல் நோக்கங்களுக்காகச் செய்யப்படுகின்ற அமைப்பு ரீதியான சைபர் குற்றங்களும் அதிகரித்து வருகின்றன. தாக்குதல் மூலம் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும், தாக்குதல்களை ஒழுங்கமைத்து செயற்படுத்தும் ஓர் ஊடகமாகவும் சமூக வலைத்தளங்கள் பயன்படுத்தப்படுகின்றன. தற்காலத்தில் புதிய முயற்சியாளர்கள் நம்பிக்கை வைத்துள்ள வலையமைப்புகள் அதிக அளவில் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன.

### இணையத் துன்புறுத்தல்

இணையவழி துன்புறுத்தல்கள் என்பது உலகின் அனைத்து நாடுகளிலும் வயது வேறுபாடு இன்றி பெரும்பாலானோர் முகம் கொடுக்கும் ஒரு பிரச்சினை ஆகும். இணையத்தின் ஊடாக ஒருவரைக் கண்டபடி வன்மையாக விமர்சித்தல், அச்சுறுத்தல் அல்லது கௌரவத்துக்குக் கேடு விளைவித்தல் என்பன இணையத் துன்புறுத்தலில் உள்ளடங்குகின்றன. இவ்வாறான பிரச்சினைகளுக்கு ஒருவர் முகம்கொடுத்தால், அவர் அது தொடர்பான சட்ட நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். மாறாக மௌனமாக இருந்தால் இணையக் குற்றவாளிகள் சுதந்திரமாக நடமாடுவதற்கு இடம் வழங்கப்படுகின்றது என்று பொருள். எனவே இது தொடர்பில் உடனடியாக முறைப்பாடுகளை வழங்கவேண்டும்.

இணையத்தளப் பரிவர்த்தனைகள் எப்போதும் பாதுகாப்பானதாகவே உள்ளது என்பதை எப்போதும் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். பாதுகாப்பான இணையத்தளத்தைப் பயன்படுத்துவதன் மூலம் ஒரு தகவலை அனுப்பும் மற்றும் பெற்றுக் கொள்ளும் நபர்களைத் தவிர மூன்றாவது நபரால் அதை அணுகமுடியாது. சில இணையத்தளங்கள் நம்பகரமானவை என்பதை உறுதிப்படுத்துவதற்காக சில குறிப்புக்களையும் காண்பிக்கும். கடினமான கடவுச்சொற்களை யாரும் விரும்புவதில்லை என்றாலும் இணையப் பயன்பாட்டின் போது உங்களை பாதுகாப்பாக வைத்துக்கொள்வதற்கு அதுவே சிறந்த வழியாகும்.



இணையத்தளம் பற்றிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும், இணையத்தளம் நம்பகரமானது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும், பரிவர்த்தனைகளை கண்காணித்தல், கடவுச்சொல்லை பாதுகாப்பாக வைத்தல், மற்றவர்களின் சாதனங்களை பயன்படுத்தினால் இணையத்தள பாவனைத் தரவுகளை அழித்துவிடல், போன்ற செய்முறைகளை மேற்கொள்ளவேண்டும். இணையத்தை பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் பயன்படுத்த வேண்டியது எங்கள் ஒவ்வொருவரினதும் பொறுப்பும் கடமையுமாகும். ■

## ஆசி கந்தராஜாவின் வரலாற்று நாவல்

# 'அகதியின் பேர்லின் வாசல்'

இ.மயூரநாதன்




ஆசி. கந்தராஜாவின் 'அகதியின் பேர்லின் வாசல்' என்னும் வரலாற்றுப் புதினம், ரஷ்ய மேற்குலகப் பனிப்போர்க் காலக் களம் ஒன்றின் பின்னணியில் யாழ்ப்பாணத்து மாந்தர்களின் கதைகளைச் சிறப்பாகவும் சுவையாகவும் சித்தரிக்கிறது. உலகின் மிகவும் வலிமை பொருந்திய நாடுகளுக்கு இடையே எங்கோ நடைபெறும் அரசியல் இழுபறிகளை உலகின் இன்னொரு மூலையில் வாழ்ந்த சாதாரணமான யாழ்ப்பாணத்துக் குடிமக்கள் சரியாகவும் தவறாகவும் எவ்வாறு பயன்படுத்திக்கொண்டு தமது இலக்குகளை அடைய முயன்றார்கள் என்பதைக் கதை சுவை குறையாமல் சொல்கிறது இந்தப் படைப்பு.

பழமைவாத யாழ்ப்பாணச் சமூகத்தின் உறுப்பினர்களான ஆண்களும் பெண்களும் போர்க்கால ஆபத்துகளிலிருந்து தப்பவும், பொருளாதார அடிப்படையில் வாழ்க்கையை மேம்படுத்தும் ஆசையாலும் தாம் ஒரு காலத்தில் போற்றிப் பாதுகாத்த விழுமியங்களை சமரசம் செய்துகொள்ளவேண்டி ஏற்பட்டது என்பதையும் உணர முடிந்தது. குறிப்பாக, தராவி போன்ற இடங்களில் எவ்வித பாதுகாப்பும் அடிப்படை வசதிகளுமின்றி அல்லற்படுவோரின் கதைகள் மனதை உறுத்தின. வெளிநாட்டுக்குப் போனார்கள் நல்லாயிருக்கிறார்கள் என்ற யாழ்ப்பாணத்தாரின் எளிமையான புரிதலுக்கு அப்பால், சட்டத்துக்குப் புறம்பான புலப்பெயர்வின் கோரமுகத்தை எடுத்துக் காட்டும் கதை, கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்குப் படிக்கச் சென்றவர்களுடைய வாழ்க்கை, தனிப்பட்ட காதலுணர்வுகள், சபலங்கள் முதலிய விடயங்கள் கதையைச் சமநிலையில் நகர்த்திச்செல்ல உதவுகின்றன எனலாம்.

மும்பை, கிழக்கு பேர்லின், மேற்கு பெர்லின், லண்டன் என உலகு தழுவிய களங்களூடாகக் கதை நகர்ந்த போதும், நிகழ்வுகளை யாழ்ப்பாணத்து வாழ்வியல் முறைகளூடாகக் கட்டுப்படுத்த முயலும் யாழ்ப்பாணக் கதை மாந்தர்களின் செயற்பாடுகளைக் கதை சிறப்பாக வெளிப்படுத்துகிறது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய சிக்கலானதொரு அரசியல் பின்னணியில் ஈழத் தமிழர்களின் புலப்பெயர்வை எல்லோருக்கும் புரியும்படி மிகவும் எளிமையாக வெளிப்படுத்தியிருப்பது நாவலின் வெற்றி எனலாம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு...

முல்லைத்தீவில் உள்ள குருந்தூர்மலையில் நீதிமன்றக் கட்டளைகளை மீறி விகாரை அமைக்கப்பட்டு வருகின்றது என்று குருந்தூர்மலை ஐயனார் ஆலய நிர்வாகம் சார்பில் கடந்த மார்ச் மாதம் 2 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்காக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் எடுக்கப்பட்டது.

நீதிமன்றக் கட்டளையை மீறி குருந்தூர் மலையில் விகாரைக் கட்டுமானங்கள் நடைபெறுகின்றன என்று தெரிவிக்கப்படும் நிலையில், மாவட்ட நீதிவான் நேற்று அங்கு நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த சிரேஷ்ட பிரதி செலிசிட்டர் ஜெனரல் அசாத் நவாவியுடன், அரச சட்டவாதி நிஷாந் நாகரட்ணம் ஆகியோரும், தொல்லியல் திணைக்களத்தின் பதில் பணிப்பாளரும் அங்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் ரி.சரவணராஜா நிலைமைகளை ஆராய்ந்ததுடன், தொல்லியல் திணைக்களத்தால் அங்கு திரைநீக்கம் செய்யப்பட்டுள்ள நினைவுக் கல் மற்றும் விகாரைக் கட்டுமானங்கள் தொடர்பாக அறிக்கை வழங்க பொலிஸாருக்கும், தொல்லியல் திணைக்களத்துக்கும் கட்டளை பிறப்பித்துள்ளார். 2022ஆம் ஆண்டு ஜீன் மாதம் 12ஆம் திகதி அன்று உள்ள சூழ்நிலையைப் பேண வேண்டும் என்று நீதிமன்றம் வழங்கிய கட்டளையை மீறி அந்தப் பகுதியில் கட்டுமான வேலைகள் நடைபெற்றுள்ளமை ஆதாரத்துடன் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று ஆதிசிவன் ஐயனார் ஆலயம் சார்பாக முன்னிலையான சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

அதேவேளை, நீதிபதியும் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளும் களப் பயணம் மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர, பௌத்த தேரர்கள் மற்றும் பெரும்பான்மையின மக்கள் பலர் குருந்தூர்மலைக்கு வந்திருந்தனர். மறுபுறத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், க.சிவநேசன் ஆகியோரும் ஆலய நிர்வாகத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் வந்திருந்தனர்.

(அ-எ-26,19,246)

## வாயைத் திறந்த...

மேற்கொள்ளப்படுகின்றதா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா நேற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த நிலையில், சமநேரத்தில் அங்கு சென்றிருந்த பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர நீதிபதி ரி.சரவணராஜாவிடம் தன்னை அறிமுகப்படுத்தி கருத்துச்சொல்ல முற்பட்டபோது, அவரது கருத்தினை ஏற்கமறுத்த நீதிபதி, நாடாளுமன்ற உறுப்பினர்களோ, அரசியல்வாதிகளோ இங்கு கருத்துத்தெரிவிக்க முடியாதெனவும், இங்கு நீதிமன்ற விசாரணையே இடம்பெறுவதாகவும், அங்கிருந்து சரத் வீரசேகரவை விலகிச் செல்லுமாறும் எச்சரித்தார். அதனைத் தொடர்ந்து சரத் வீரசேகர அங்கிருந்து விலகிச் சென்றார். (அ-ம-246,26)

## ஆதிசிவன்...

விழா முன்னெடுக்கப்படவுள்ளது. குருந்தூர்மலை விவகாரத்தில் ஆதிசிவன் ஐயனார் ஆலய வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் ஏற்கனவே நீதிமன்ற கட்டளையின்படிசைவவழிபாடுகளைமேற்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டமைக்கு அமைய எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் இருந்த இடத்தில் இந்தப் பொங்கல் வழிபாடு முன்னெடுக்கப்படவுள்ளது. (அ-ம-19,246)

## மன்னாரில்...

ஒருவர் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளும் கப் ரக வாகனமும் மோதுண்டதிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது. உயிலங்குளம் பகுதியைச் சேர்ந்த செபமாலை சிறிதரன் (வயது- 55) என்பவரே விபத்தில் உயிரிழந்தார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை உயிலங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-213)

## நயினாதீவு...

கலாமன்றத்தில் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. நயினாதீவு மண்ணில் தனது 11 வயதில் குடியேறிய அவருக்கு பொன்விழா கொண்டாட்டம் நயினாதீவு மக்கள் மற்றும் நலன்விரும்பிகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இது தொடர்பான செய்தி சேகரிப்புக்கும் ஊடகவியலாளர்களுக்கு அரச தகவல் திணைக்களம் அழைப்பு விடுத்துள்ளது. (அ-ஒ.5)


# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் சபை நிதி 2023

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது சபை நிதியினை கொண்டு கீழ்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02. தல்லவர், உள்ளுராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர், யாழ்ப்பாணம் வடமாகாணம், தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வீதி, கட்டட திருத்த வேலைகளுக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி கட்டுமானம் மற்றும் கட்டிட நிர்மாண துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: -021-205 8867, தொலைநகல்: 021-205 8866) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09:00 மணிமுதல் மாலை 15:00 மணிவரை 2023.07.05 ஆம் திகதியில் இருந்து 2023.07.19 ஆம் திகதி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம் அவர்களிடமிருந்து 2023.07.05 ஆம் திகதியிலிருந்து 2023.07.19 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் காலை 09:00 மணிக்கும் 15:00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2,000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து தலைவர் பெறுகைக்குழு . வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 2023.07.20 ஆம் திகதி மு ப 10:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது 2023.07.20 அன்று கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்வி, கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம், கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது

10. கேள்வி கோரல் பற்றிய முன் கேள்வி கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 2023.07.12 ஆம் திகதி மு.ப.11:30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம |
| NP/14/41(13)/2/Dev/2023/01 | சந்தை , பஸ் நிலையம் திருத்தம் அச்சுவேலி | 1.64 | 90 நாட்கள் | C9 அல்லது C8 (கட்டட நிர் மாணம்) | 49 நாட்கள் | 17,000.00 | 05.10.2023 |
| NP/14/41(13)/2/Council/PIV/2023/01 | நாயன்மார்கட்டு பாரதி வீதி 1ம் ஒழுங்கை – கட்டம் 02 | 1.73 | 90 நாட்கள் | C9 அல்லது C8 (வீதி கட்டுமானம்) | 49 நாட்கள் | 18,000.00 | 05.10.2023 |
| NP/14/41(13)/2/Council/PIV/2023/02 | உடையார் வீதி திருத்தம் உரும்பிராய் - கட்டம் 02 | 2.00 | 90 நாட்கள் | C9,C8 அல்லது C7 (வீதி கட்டுமானம்) | 63 நாட்கள் | 21,000.00 | 19.10.2023 |
| NP/14/41(13)/2/Dev/2023/02 | உரும்பிராய் பொதுச்சந்தை ஒழுங்கை திருத்தம் | 1.01 | 90 நாட்கள் | C9 அல்லது, C8 (வீதி கட்டுமானம்) | 49 நாட்கள் | 11,000.00 | 05.10.2023 |
| NP/14/41(13)/2/Council/PIV/2023/03 | வரிக்கம்பரை வீதி திருத்தம் ஊரணி புத்தூர் கிழக்கு கட்டம் 02 | 6.41 | 90 நாட்கள் | C8 ,C7 அல்லது C6 (வீதி நிர்மாணம்) | 77 நாட்கள் | 65,000.00 | 02.11.2023 |
| NP/14/41(13)/2/Council/PIV/2023/04 | கலைமதி வீதி 6ம் ஒழுங்கை திருத்தம் | 1.88 | 90 நாட்கள் | C9 அல்லது C8 (வீதி கட்டுமானம்) | 49 நாட்கள் | 19,000.00 | 05.10.2023 |
| NP/14/41(13)/2/Dev/2023/03 | முகப்பு அலுவலகம் பொருத்துதல் - உப அலுவலகம் புத்தூர் | 4.52 | 90 நாட்கள் | C9, C8 அல்லது, C7 (கட்டட நிர் மாணம்)) | 63 நாட்கள் | 46,000.00 | 19.10.2023 |
| NP/14/41(13)/2/Dev/2023/04 | ஞானவைரவர் வீதி இந்து மயான இணைப்பு வீதி திருத்தம் | 3.03 | 90 நாட்கள் | C9, C8 அல்லது C7 (வீதி கட்டுமானம்) | 63 நாட்கள் | 31,000.00 | 19.10.2023 |
| NP/14/41(13)/2/Dev/2023/05 | உரும்பிராய் உப அலுவலகம் புணரமைத்தல் | 3.02 | 90 நாட்கள் | C9, C8 அல்லது C7 (கட்டட திர்மாணம்) | 63 நாட்கள் | 31,000.00 | 19.10.2023 |
| NP/14/41(13)/2/Dev/2023/06 | அலுவலக மலசலகூடம் புணரமைத்தல் | 0.33 | 90 நாட்கள் | C9 அல்லது C8 (கட்டட நிர் மாணம்) | 49 நாட்கள் | 4,000.00 | 05.10.2023 |
| NP/14/41(13)/2/Dev/2023/07 | புத்தூர் மீன் சந்தை அமைத்தல் கட்டம் 02 | 2.70 | 90 நாட்கள் | C9, C8 அல்லது C7 (கட்டட நிர் மாணம்) | 63 நாட்கள் | 28,000.00 | 19.10.2023 |

**தலைவர்,**
**உள்ளுராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை புத்தூர்.**
**யாழ்ப்பாணம்.**
**2023.07.05**


(cr 40298) (N.1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருந்தூர்மலையில்

# சட்டவிரோதக் கட்டுமானம் கல்வெட்டே சான்றாதாரம்

## நீதிவானிடம் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டு



முல்லைத்தீவு, ஜூலை 5

முல்லைத்தீவு குருந்தூர்மலையில் நீதிமன்ற உத்தரவை மீறிய வகையில் அங்கு விகாரையொன்று அமைக்கப்பட்டுள்ள நிலையில், அந்த விகாரை தொடர்பான கல்வெட்டொன்று பௌத்த லோக நற்பணி மன்றத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. இது பெரும் சர்ச்சையாகியுள்ளது.

விகாரைக் கட்டுமானங்கள் நடைபெறுகின்ற இடத்துக்கு, மாவட்ட நீதிவான் நேற்று நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்தார். இதன்போதே மேற்படி கல்வெட்டுத் தொடர்பில் பல்வேறுபட்ட கருத்துக்களும் தகவல்களும் நீதிவான் முன்னிலையில் வெளிப்படுத்தப்பட்டன.

குருந்தூர்மலையில் அமைக்கப்பட்ட விகாரைக்கு அருகில் மூன்று மொழிகளிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட அந்த நினைவுக் கல்வெட்டில் வெற்றி உண்டாகட்டும் என்ற தலைப்பில்,

'முல்லைத்தீவு குருந்தி விகாரையில் அமைந்துள்ள இந்தப் பிரமாண்டமான தூபி இரண்டாயிரம் வருடங்களைக் கடந்த பெருமைமிக்கது. 37 அடி உயரமும் 16.5 அடி ஆரையும் கொண்டது. இலங்கையில் தற்போது காணப்படுகின்ற தூபிகளில் முற்றத்தில் இருந்தே செங்கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ள ஒரேயொரு தூபி இதுவென்பதோடு, இதற்குக்கீழே காணப்படும் சுவரில் சுமார் இரண்டு அடி உயரம் கொண்ட யானைகளின் வரிசை, யானைகளுக்கிடையே காணப்படும் தூண்கள், தூபியின் வளையம் உட்பட அனைத்துச் செதுக்கல் வேலைப்பாடுகளும் செங்கற்களாலே செதுக்கப்பட்டுள்ளது. விகாராதிபதி கலகமுவ சாந்தபோதி தேரரின் வழிகாட்டல்களின் கீழ், தொல்பொருள் திணைக்களத்தின் தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் அனுரமனதுங்கவின் பங்குபற்றலுடன், தொல்பொருள் அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ், இலங்கை இராணுவம் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினரின் அயராத பங்களிப்புடனும் பௌத்தலோக நற்பணி மன்றத்தின் முழுமையான நிதி பங்களிப்புடனும் தொல்பொருள் திணைக்களத்திடம் கையளிக்கப்படுகின்றது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**சட்டவிரோதமான கட்டடம்**

இந்தக் கல்வெட்டு அவதானிக்கப்பட்டதையடுத்து, இந்த விகாரை அமைப்பதற்கு தொல்பொருள் திணைக்களம் அனுமதி வழங்கியதா? என்ற கேள்வி எழுந்துள்ளது. அத்துடன், தொல்பொருள் திணைக்களம் அகழ்வாராய்ச்சி என சொல்லப்பட்ட இடத்தில், 'பௌத்த லோக நற்பணி மன்றத்தால் எவ்வாறு விகாரை கட்டப்பட்டது என ஆதிஐயனார் ஆலய சட்டத்தரணிகளால் அந்த இடத்தில் வைத்து நீதிபதிக்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

நினைவுக்கல் பெயர்ப்பலகையில், தொல்பொருள் திணைக்களத்தின் அனுமதியுடன் பௌத்தலோக நற்பணி மன்றத்தால் விகாரை நிறுவப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் தொல்பொருள் திணைக்களத்தால் அது அமைக்கப்பட்டது என்று நீதிமன்றில் தெரிவிக்கின்றார்கள்.

ஆயினும் கட்டுமானங்களை அமைக்க பிற நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கும் அதிகாரம் தொல்பொருள் திணைக்களத்துக்கு இல்லை. ஆதலால் இந்தப் பெயர்ப்பலகையும் அது குறிப்பிடும் கட்டுமானங்களும் சட்டத்துக்குப் புறம்பானவை என்றும் ஆதிஐயனார் ஆலய சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினார்கள். அத்துடன், கல்வெட்டில் குறிப்பிடும் பல கட்டுமானங்கள் தற்போது இல்லை. எனின், இது எதிர்காலத்தில் அமைக்கப்படவுள்ள கட்டுமானங்களைக் குறிக்கின்றதா? என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினார்கள்.

இதேவேளை - பௌத்தலோக நற்பணி மன்றத்தின் சார்பில் பிரசன்னமான சட்டத்தரணி தனது ஆட்சேபனையை அந்த இடத்தில் நீதிபதியிடம் முன்வைத்தார். 'இந்த இடத்தில் தொல்பொருள் திணைக்களம் தொல்பொருள் சட்டங்களின் கீழ் இந்தக் கட்டுமானங்களைச் செய்து வருகின்றது. தொல்பொருள் சட்டத்தின் விதிமுறைகளை மீறி செயற்பட்டிருந்தால் அவற்றை அகற்ற நீதிமன்றத்துக்கு அதிகாரமுள்ளது. ஆனால், இங்குள்ள அனைத்தும் தொல்பொருள் திணைக்களத்தின் அனுமதியுடன் அமைக்கப்பட்டவையே. எதிர்கால சந்ததிக்கு இங்கு புனருத்தாரணம் செய்தது யார் என்று தெரியவேண்டும் என்பதற்காகக் கல்வெட்டு அமைக்கப்பட்டுள்ளது' -என்று அவர் தெரிவித்தார்.

(அ-ம-19,26)

# மண்டைதீவுக் காணிகளை சுவீகரிப்பதை எதிர்ப்போம்

## சிறீதரன் எம்.பி. அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 5

மண்டைதீவுக் காணிகளை கடற்படைக்கு சுவீகரிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், இந்தக் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராட வருமாறு நாடாளுமன்ற உறுப்பினரான சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டம் வேலணைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மண்டைதீவுக் கிழக்கில் உள்ள, 29 பேருக்குச் சொந்தமான 18 ஏக்கருக்கும் அதிகமான தனியார் காணிகளை, வெலுசுமன கடற்படை முகாம் அமைப்பதற்காகச் சுவீகரிக்கும் நோக்கில், எதிர்வரும் 12ஆம் திகதி அளவீட்டுப் பணிகளை ஆரம்பிக்கப்போவதாக நில அளவைத் திணைக்களத்தினரால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்தே இந்த அளவீட்டுப் பணிகளைத் தடுத்து நிறுத்துவதற்காக மக்கள் பிரதிநிதிகள், காணி உரிமையாளர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் அன்றையதினம் காலை 9 மணிக்கு மண்டைதீவு கிழக்கில் இடம்பெறவுள்ள எதிர்ப்புப் போராட்டத்தில் இணைந்துகொள்ளுமாறு மேற்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(அ-ம-125)


# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நவக்கிரி பகுதியில் 38 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

## நிலப்பரப்பு

✓ நவக்கிரி மாணிக்கப் பிள்ளையார் கோயில் வீதியில்.

✓ 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.

✓ 3 வருடம் பூர்த்தி அடைந்த தென்னைகளும் உள்ளன.

✓ நிலாவரை வற்றாக் கிணற்றில் இருந்து 1 km தூரம்.

✓ நன்னீரூற்றுச் சூழல்

✓ 1 பரப்பின் விலை 1200000/=

(பன்னிரண்டு இலட்சம்)

**பார்வையிடும் நேரம் :-**

காலை 6.00 மணி தொடக்கம்

மாலை 6.00 மணிவரை.

தொடர்புகளுக்கு :- ஜெயம்

077 81 47 389

077 98 65 457


# வீடுகளையுடைத்துத் திருட்டு இளைஞரொருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 5

மூன்று வீடுகளை உடைத்து திருட்டில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் இளைஞரொருவர் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவினரால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட இளைஞரிடமிருந்து மோட்டர், கிரைண்டர் உள்ளிட்ட மின்சாதனங்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

மேற்படி இளைஞரால் திருடப்பட்ட பொருள்களை உடைமையில் வைத்திருந்த சந்தேகத்தில் 27 வயதுடைய மேலும் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லிட்ரோ ரூ.2,982

லிட்ரோ எரிவாயு நிறுவனம் நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிவாயுவின் விலைகளைக் குறைத்துள்ளது. இதன்படி 12.5 கிலோகிராம் எரி வாயுவின் புதிய விலையாக 2 ஆயிரத்து 982 ரூபா நிர்ணயிக்கப் பட்டுள்ளது. நேற்று நடத்திய ஊட கவியலாளர் சந்திப்பில் லிட்ரோ நிறுவனத் தலைவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். இதன்படி, 12.5 கிலோகிராம் எரி வாயு சிலிண்டர் 204 ரூபாவால் குறைக்கப்படுகிறது. இதற்கமைய, 12.5 கிலோகிராம் எரி வாயு சிலிண்டரின் புதிய விலை 2 ஆயிரத்து 982 ரூபாவாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது. அதேபோல், 5 கிலோகிராம் சமை யல் எரிவாயு சிலிண்டர் 83 ரூபாவால் விலைக் குறைப்புச் செய்யப் பட்டு புதிய விலை யாக ஆயிரத்து 198 ரூபா நிர்ணயிக்கப் பட்டுள்ளது. 2.3 கிலோகிராம் சமை யல் எரிவாயு சிலிண்டரின் விலை 37 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 561 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள் ளது. (அ-ம)


## DHL துரித பொதிகள் சேவை



சகல நாடுகளுக்கும் கடிதங்கள், பொதிகள்
3-5 வேலைநாட்களில் ஒப்படைக்கப்படும்
**திருமுருகன் கொம்நெற்**
321, K.K.S. Road, Jaffna.
T.P: 0777 55 45 28

## 10 ஏக்கர் காணி தேவை

A9 வீதி அல்லது பரந்தன் - முல்லைத்தீவு பிரதான வீதி அல்லது பரந்தன் - பூநகரி - யாழ் பிரதான வீதி அல்லது அதனை அண்மித்த 5Km சுற்று வட்டாரத்திற்கு உட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி நாய்களை பராமரிப்பதற்கான நிலையம் ஒன்றை அமைப்பதற்கு 10 ஏக்கரிற்கும் அதிக விஸ்தீரணம் கொண்ட உறுதிக் காணி தேவைப்படுகிறது. நிழல் தரும் மரங்கள் உள்ள காணி விரும்பத்தக்கது.

**077 715 7070**

## முழுநேர / பகுதிநேர வேலைவாய்ப்பு

**இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**அடிப்படைத் தகைமைகள்**

- ✓ G.C.E (O/L) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- ✓ 18 - 60 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக்கோவையை (BIO DATA) கீழ்வரும் Whatsapp இலக்கத்துக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Whats: app 077 756 3781
jenyjude77@yahoo.com
(CS/51127) AH-1

## மணமகள் தேவை

01. புங்குடுதீவு. இந்து கௌரவகுலம் (V). 1979. விசாகம். CIMA, Business Administation, UK, Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 15039
02. கோப்பாய். இந்து கௌரவகுலம் (V). 1984. சதயம். MBBS Doctor, UK Citzen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 32160
03. திருநெல்வேலி. இந்துகௌரவகுலம் (V). 1990. விசாகம். MBBS Doctor, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 32016
04. திருநெல்வேலி. இந்துகௌரவகுலம் (V). 1983. ரோகினி BSc (Hons) Computer Science, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 31305
05. உரும்பிராய். இந்துகௌரவகுலம் (V). 1974. திருவோணம். BSc, Finance Advisor, கனடா Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 23110
06. மல்லாகம் - உடுவில். இந்து கௌரவகுலம் (V). 1984. சுவாதி.BSc, Masters in Statistics, USA Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 28963
07. காரைநகர். இந்து கௌரவகுலம் (V). 1986. உத்திராடம். Airspace Engineer, USA, Citzen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 27891

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer Phone - 077 539 3728 Whatsapp - 077 803 8193

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவம் உள்ள. பழக விரும்பும் ஆண். பெண் விற்பனையாளர் உடன் வேண்டும். மேலும்.
I. காசாளர் (வயது: 60-70.முன் அனுபவம்)
II. விற்பனையாளர்
III. பில் கிளாக் ( ஆண். பெண்)

**074 073 4830, 021 222 9286**

## புலமைச் சாதனை மாதிரி வினாத்தாள் வெளிவந்துவிட்டது

- ✓ தரம் 4,5 மாணவர்களுக்கானது
- ✓ பனுவல் - யாழ் இந்து அருகில்
- ✓ லங்கா , இனியதென்றல் குயின்சி
- ✓ சிதம்பரப்பிள்ளை - வடமராட்சி
- ✓ துர்க்கா - சுன்னாகம்
- ✓ ஆகிய இடங்களில் கிடைக்கின்றது.
- ✓ புலமைச் சாதனை நூலகத்தில் இலவசமாக நூல்களை கற்கலாம்.

G.P.S வீதி, கல்வியங்காடு 077 11 70 971
(CS/54441)AH-1

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- * பருத்தித்துறை வீதி. புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- * புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
- * மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- * வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
- * பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
- * நன்னீரூற்று.
- * ஒரு பரப்பின் விலை 200,000/= (இரண்டு லட்சம்) மட்டும்.

தொடர்பு: **076 8260 354, 076 0570 354**

## கடை மற்றும் அறைகள் வாடகைக்கு



**கடை**
காப்புறுதி மற்றும் நிதி நிறுவனங்கள் வணிக நிறுவனங்களுக்கு ஏற்றதாகும்.

**அறைகள்**
வெளிமாவட்ட பயணிகள், சுற்றுலா பயணிகள்.

பொன்னாலை வீதி, மானிப்பாய். (பொலிஸ் நிலையம் அருகாமையில்)
தொடர்புகளுக்கு
**076 212 9031**
(CS/51041)AH-1

## சரவணபவன் பென்சி கவுஸ் இன் மாபெரும் ஆடித் தள்ளுபடி

கொழும்பு மொத்த விலையில் 30% விலைக்கழிவுடன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். பிளாஸ்ரிக் பொருட்கள், கிறீம் வகைகள், பான்சி வகைகள், பாட்டா வகைகள், சில்வர், மாபிள், அலுமினிய பொருட்கள், சோடனை பொருட்கள், விளையாட்டு பொருட்கள், மணிக்கூட்டு வகைகள், தையல் உபகரணங்கள், அன்பளிப்பு பொருட்கள், மொடல் பட்டின்கள், குடைகள், அழகுசாதன பொருட்கள், மாஸ்க் வகைகள், கவரிங் வகைகள், பாடசாலை உபகரணங்கள், பாக் வகைகள் இன்னும் பல பொருட்கள் ஒரே இடத்தில் மலிவாக பெற்று கொள்ளலாம்.

**உரிமையாளர்:**
**தே. கலைத்தாசன் (கரன்)**
**021 3155 900**

**26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன், (கஸ்தூரியார் வீதி)யாழ்ப்பாணம்.**


## கண்ணீரில் கரையும் ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 20 - 07 - 1974

மறைவு 15 - 07 - 2022

அமரர்

**கலைமதி செல்லத்துரை (கணக்காளர்)**

(BBA (Hons), Dip in Pub ADM, MA in Pub ADM, LLB (Hons))
(முன்னாள் கணக்காளர் - வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகம், முன்னாள் போதனாசிரியர் - அஞ்சல் பயிற்சிக் கல்லூரி - யாழ்ப்பாணம்)
(திதி: 05.07.2023)

எங்கள் குடும்பம் என்னும் கோவிலிலே
ஒளி விளக்காய் இருந்தவளே!
ஆற்றல், விடாமுயற்சியின் மறுவடிவமே!
எண்ணிய எண்ணங்களில் ஏற்றம் கண்டவளே!

வாழ்க்கை எனும் பாதையிலே - நாம்
பிரிந்து சென்ற வேளையிலும்
பாசம் எனும் பிணைப்பால் - எம்
எல்லோரையும் பிணைத்தவளே!

நேற்றுப்போல் உள்ளது
உனை நாடி நாம் நாடு வந்தவேளை
எமையெல்லாம் பெருந்துயரில்
ஆழ்த்திவிட்டு மறைந்துவிட்டாய்

நித்தமும் உன் நினைவுகளால்
கண்கள் குளமாக நெஞ்சம் ரணமாக
பற்றின்றி நடைபிணமாக
வாழ்கின்றோம் - ஆனாலும்
உன் ஆன்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

72/50, பனிக்கர் லேன்,
திருநெல்வேலி.

(CS/51092)AH-1

**குடும்பத்தினர்.**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org